REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 24 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 123 | Friday 24, May, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## சடுதியாக விலை குறைந்த தங்கம்



இந்தியாவின் சென்னையில் நேற்று தங்கத்தின் விலை சடுதியாக குறைந்துள்ளது. இதனால் தங்க வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் தங்கத்தின் விலை சடுதியாக அதிகரித்து ஒரு பவுண் தங்கம் 55 ஆயிரம் ரூபாவை 04



கொழும்பு கங்காராம விகாரை வெசாக் வழிபாடுகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று கலந்து கொண்டதோடு வெசாக் வலயத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: சுலோச்சன கமகே)



## உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு உள்ளது

### 2024 அரச வெசாக் விழாவில் ஜனாதிபதி

தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்துடன் வேகமாக முன்னேறி வரும் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருப்பதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதனால் தேரவாத பௌத்தத்தின் உண்மையான நோக்கம் பாதுகாக்கப்பட்டு உலகுக்கு எடுத்து செல்லப்பட வேண்டுமெனவும், அவர் கூறினார்.

மாத்தளை தர்மராஜா பிரிவேனா விகாரையில் நேற்று நடைபெற்ற அரச வெசாக் விழாவில் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

மாத்தளையில் நடைபெறும் அரச வெசாக் விழாவில் ஜனாதிபதி கலந்துகொள்ளவிருந்த போதிலும், சீரற்ற காலநிலை காரணமாக ஜனாதிபதி அதில் கலந்துகொள்ளவில்லை. இந்நிலையில் செய்மதி தொழில்நுட்பத்தினூடாக அரச வெசாக் விழாவில் 04



## பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள அதிகரிப்பு விடயம்

# ஆட்சேபிக்கும் கம்பனிகளின் நிதி நிலைமையை ஆராய குழு

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

லோரன்ஸ் செல்வநாயகம்

**"சம்பள அதிகரிப்பை வழங்கத் தவறும் குறித்த நிறுவனத்துடனான காணி குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவும் சட்டத்தில் இடமளிக்க அமைச்சரவை அங்கீகாரம்"**

சம்பளத்தை வழங்கவும் முடியாத நிலையில் பலவீனமான முகாமைத்துவத்துடன் செயற்படும் அரசாங்கத்துக்கு சொந்தமான நிறுவனங்களின் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு தேவையான வகையில் சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட சில விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவ்வாறு அரசாங்கத்துக்கு சொந்தமான காணிகளை அதிக பயனை பெற்றுக்கொள்ளும் வகையில் முதலீட்டாளர்களுக்கு வழங்கி அந்த வளங்கள் மற்றும் அதன் பயன்களை ஊழியர்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

அந்த வகையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான அறிவிப்பை அரசாங்கம் அண்மையில் வெளியிட்டாலும், சில தோட்ட நிறுவனங்கள் அந்த சம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென அரசாங்கத்துக்கு நிபந்தனைகளை முன்வைத்துள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார். 04

## IMF கூட்டம் நிறைவடைய முன்

# கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தம் கைச்சாத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று குழுக் கூட்டம் நிறைவடைவதற்கு முன்னர் நாட்டின் கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்காக பரிஸ் கிளப் மற்றும் சீன எக்சிம் வங்கியுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அந்த வகையில் பரிஸ் கிளப்பின் உத்தியோகபூர்வ கடன் தெரிவுக்குழு மற்றும் 04

## ஜனாதிபதி ரணில் இன்று வடக்குக்கு விஜயம்

### பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

வடமாகாணத்துக்கு மூன்று நாள் விஜயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று செல்வதுடன், அங்கு நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் அவர் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை ஜனாதிபதி வழங்கி வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளதுடன், வடக்கில் இளைஞர்களுடனான விசேட 04

## கொரியமொழி பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

### மருத்துவ பரிசோதனை மே 28 இல்

உற்பத்தி மற்றும் கடற்றொழில் துறைகள் தொடர்பான கொரியமொழி புலமைப்பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளதுடன், இதில் 3,422 பேர் சித்தியடைந்துள்ளதாக, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

இப்பரீட்சை பெறுபேறுகள் www.slbfe.lk எனும் இணையத்தளத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாகவும், அப்பணியகம் குறிப்பிட்டது. 04

## சர்வதேச மன்னிப்பு சபையிடம் பாதுகாப்பு குழு தலைவர் கேள்வி

### இராணுவத்தினரை ஏன் நினைவுகூரவில்லை?




விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூர்ந்த சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் அக்னெஸ் கலமார்ட், புலிகளால் படுகொலை செய்யப்பட்ட சிங்களவர்களையும் இராணுவத்தினரையும் ஏன் நினைவுகூரவில்லையென, தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவர் சரத் வீரசேகர 04

## கடும் காற்றுடன் கூடிய மழை சில தினங்களுக்கு தொடரும்

### வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் தற்போது நிலவி வருகின்ற பலத்த காற்றுடனான மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை மேலும் சில தினங்களுக்கு தொடருமென, வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை 04

## கண்டி, நுவரெலியா, இரத்தினபுரியில் திடீர் வெள்ளப்பெருக்கு அபாயம்

**கண்டி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மேலும் கடும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதால் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான அபாயம் உள்ளதாக, நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.**

**இதன் காரணமாக அம்மாவட்டங்களின் தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் முன்கூட்டிய ஏற்பாடுகளை மேற்கொள்வது அவசியமென, நீர்ப்பாசன, நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுப் பணிப்பாளர்** 04

## இந்தியாவில் கைதான

# நான்கு ISIS சந்தேகநபர்கள் தொடர்பாக விசாரிக்க குழு




### பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவிப்பு

இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்களென்ற சந்தேகத்தில் கைதான 4 இலங்கையர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் 04

## வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக உருவாகலாம்

### இலங்கை, இந்திய வானிலை ஆய்வு மையங்கள் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



**வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக உருவாகலாமென, இலங்கை மற்றும் இந்திய வளிமண்டலவியல் திணைக்களங்கள் மற்றும்** 04

## சீரற்ற காலநிலையால் 36,900 மின்செயலிழப்புகள்

### விரைவில் நிவர்த்தி செய்ய நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



தற்போது நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக நாடளாவிய ரீதியில் கடந்த சில தினங்களில் 36 ஆயிரத்து 900 மின்சார செயலிழப்புகள் இடம்பெற்றதாக, மின்சார சபை தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் நாடளாவிய ரீதியில் 3 இலட்சத்துக்கும் அதிகமானோருக்கு 04

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பம் கோரல் மே 27 இல்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

லோரன்ஸ் செல்வநாயகம்



எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல் இம்மாதம் 27ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாக, இலங்கை பரீட்சை திணைக்கள ஆணையாளர் 04

## ஈரான் ஜனாதிபதி ரைசியை வரவேற்ற 11 வயது சிறுவன் கவலை



உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மறைவையிட்டு எம்பிலிப்பிட்டிய போதிராஜ மகா வித்தியாலயத்தை சேர்ந்த 11 வயதுடைய மாணவரான கய்து கித்ன கவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக்கு அண்மையில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி விஜயம் செய்த போது, அவருக்கு இச்சிறுவன் வெற்றிலை கொடுத்து வரவேற்றுள்ளான். 04

## இலங்கை மாணவிக்கு மருத்துவ கல்லூரியில் சீட்

### தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலின் உதவி

திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது



புதுக்கோட்டை மாவட்டத்தின் தேக்காட்டூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் மாணவி சு.ஷரினா 04

## இந்திய பிரதமர் மோடிக்கு கொலை அச்சுறுத்தல்



### கூடுதல் பாதுகாப்பு

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இனந்தெரியாத நபர் ஒருவரால் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து அவருக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 04

# இலங்கை பொலிஸ் திணைக்கள ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வு

## அதிதியாக ஜனாதிபதி பங்கேற்பு





2024 அரச வெசாக் தினத்தை முன்னிட்டு, இலங்கை பொலிஸ் பௌத்த மற்றும் மத அலுவல்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (22) பிற்பகல் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

இலங்கைப் பொலிஸ் மேற்கத்தேய வாத்தியக் குழுவின் இசையுடன் மற்றும் இலங்கைப் பொலிஸ் கலாசாரப் பிரிவின் நடனத்துடன் வண்ணமயமான இந்த பக்திப் பாடல் நிகழ்ச்சியில் பிரபல பாடகர்கள் மற்றும் கலைஞர்களும் இணைந்துகொண்டனர்.



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்த வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சியைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.















மாத்தளை தர்மராஜா பிரிவெனா விகாரையில் நேற்று (23) நடைபெற்ற அரச வெசாக் விழாவில் புத்தசாசன மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க உட்பட மாகாண ஆளுநர், இராஜாங்க அமைச்சர், முன்னாள் இராணுவ தளபதி உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

## கொழும்பைச் சுற்றியுள்ள வெசாக் தோரணங்கள்



பேலியாகொட



தொடலங்க



நவலோக



ஒறுகொடவத்த



மருதானை



தெமட்டகொட



கங்காராம



கிராண்ட்பாஸ்




காலிமுகத்திடல்

தேர்தல் நடைபெறவுள்ளதால்

# ஜனவரி அல்லது பெப்ரவரியில் பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்வரும் ஜூனில் இலங்கைக்கு வரவுள்ளதுடன், அவர்களுடன் பேச்சுவார்த்தை நிறைவடைந்த பின்னர் அந்த விடயம் 2025 வரவு, செலவு திட்டத்துடன் நடைமுறைப்படுத்தப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தல் நடைபெறவுள்ளதால் ஜனவரி அல்லது பெப்ரவரியில் வரவு, செலவு திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்ல அக்குரேகொட, பாதுகாப்பு அமைச்சு வீதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைமையக வளாக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றிய போது,

"நாட்டை பொறுப்பேற்ற பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதே எனது முதல் பணியாக இருந்தது. எதிர்வரும் நான்கைந்து வருடங்களில் நாட்டின் பொருளாதாரத்துக்காக எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்கள் விரைவாக எடுக்க வேண்டியிருந்தன. நாடு தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. வங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக விடுபடுவது தொடர்பாக கடன் வழங்கிய நாடுகளுடன் இப்போது பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படுகிறது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகளை சர்வதேச நாணய நிதியம் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தை சமர்ப்பிக்கவும் தேசிய பாதுகாப்பு சபையை சட்டபூர்வமாக்குவதற்கும் ஆயுதப்படை குழுவை நியமிப்பதற்கும் எதிர்பார்க்கிறோம். அத்துடன் ஓய்வுபெற்ற பாதுகாப்புப்படை வீரர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த புதிய வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும். இலங்கை மூலோபாய கற்கைகள் நிறுவகத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் நாம் இன்னும் கஷ்டமான நிலையில் இருக்கிறோம். அடுத்த இரண்டு ஆண்டுகளில் அந்நிலையிலிருந்து மீண்டு வரக்கூடிய திறன் எம்மிடம் உள்ளது. படைவீரர் கிராமங்களில் வாழும் படைவீரர்களுக்கு எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் உறுமய தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிரந்தர காணி உறுதிப்பத்திரங்கள் வழங்க ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், ரணவிருசேவா அதிகார சபையின் தலைவர் மற்றும் காணி ஆணையாளர் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

பாராளுமன்றம் கலைப்பது தொடர்பில்

# அமைச்சரவையில் எத்தகைய அறிவிப்பும் விடுக்கப்படவில்லை

## அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்புக்கு இணங்க இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமென்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக, அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் திகதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமென்று அமைச்சரவையில் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும், அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போதே, அமைச்சர் இதனை தெரிவித்தார்.

எந்த வகையிலும் பாராளுமன்றம் கலைக்கப்படுமென அமைச்சரவையில் எந்த அறிவிப்பும் விடுக்கப்படவில்லை என்பதையும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எந்த எதிர்பார்ப்பும் கிடையாதெனவும் அது சில தரப்பினரின் பகல் கனவெனவும், அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்படுவது தொடர்பாக பல்வேறு பிரசாரங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில், அவ்வாறு பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி அமைச்சரவையில் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லையெனவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"கடந்த வாரத்தில் பல்வேறு தரப்பினராலும் ஜனாதிபதி தேர்தலுக்கு பதிலாக பாராளுமன்ற தேர்தலை

04




# மரம் முறிந்து வீழ்ந்ததில் 22 வயது யுவதி உயிரிழப்பு

## புத்தளத்தில் சம்பவம்

புத்தளம் கொழும்பு பிரதான வீதியில் பத்துலுஓய பிரதேசத்தில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இம்மோட்டார் சைக்கிளில் யுவதிகள் இருவர் பயணம் செய்துள்ளனர். இதன்போது மற்றைய யுவதி காயமடைந்து சிலாபம் அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். மேற்படி விபத்தில் ஆரச்சிக்கட்டுவ வில்பொத்த பிரதேசத்தைச் சேர்ந்த சி.டபிள்யூ துலாங்கி என்ற 22 வயதுடைய யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்த இரண்டு யுவதிகளும் சிலாபத்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த போதே, இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும், பொலிஸார் கூறினர். கடந்த இரண்டு தினங்களில் புத்தளம் மாவட்டத்தில் இவ்வாறு மூன்று அனர்த்தங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அவற்றில் மூன்று பெண்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு:

# அரசாங்கத்துக்கு எதையும் மறைக்க வேண்டிய அவசியம் கிடையாது

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**




அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பாக எதையும் மறைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாதென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்வதற்கான தீர்மானம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்ட ஒன்றென சுட்டிக்காட்டிய அவர், வரவு, செலவு திட்டத்திலும் அது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அந்த வகையில் அதற்கான நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்த அவர், அதில் எதையும் மறைக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாதென்றார்.

பாராளு

04



# 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 24 மே 1932



### ஏகாதிபத்திய சலுகை

ஓட்டாவார மகாநாட்டுப் பிரதிநிதித்துவம்

### டச் இலங்கைதேயிலை

**தோட்ட முதலாளிமார் சங்கத்தின் அபிப்பிராயம்**

இம்மாதம் 13ந் தேதி திரு. ஏ. ஜி. பென்ஹாம் என்பவரின் தலைமையில் இலங்கைத் தோட்ட முதலாளிமாரின் சங்கத்துப் பொதுக்கமிட்டி ஒன்று கூடித் தேயிலைச் சலுகை வரியை ஏற்படுத்தியதற்காகக் குடியேற்ற நாட்டு மந்திரியாருக்கு நன்றி கூறும் முறையாக ஒரு நிருபம் வரையுமாறு தீர்மானித்திருக்கின்றனர்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

விடுமுறை நாட்களில்

# வாகனம் நிறுத்தும் கட்டணம் வசூலிப்பதை தவிர்க்க வேண்டுகோள்



அரச விடுமுறை நாட்களில் வெள்ளவத்தை பிரதேச காலி வீதியில் வாகனங்களை நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிப்பதை தவிர்க்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எம்.பி கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக பொதுமக்களிடமிருந்து நீண்ட நாட்களாக புகார் கிடைத்து வந்ததை தொடர்ந்து உரிய இடத்துக்கு நேற்று சென்ற மனோ கணேசன் எம்.பி., நிலைமையை ஆராய்ந்தார். இதன்போது அங்கு அரச விடுமுறை தினமான நேற்று வாகன நிறுத்துமிட கட்டணம் வசூலிக்க முயன்ற மாநகர சபை ஒப்பந்தக்காரரின் ஊழியரை அவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் மனோ கணேசன் எம்.பியின் அழைப்புக்கமைய அவ்விடத்துக்கு சென்ற வெள்ளவத்தை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி ஐ.பி.மதுசங்க, நிலைமையை ஆராய்ந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கவனம் செலுத்துமாறும் கொழும்பு மாநகர சபை போக்குவரத்து பிரதான பொறியியலாளரிடம் மனோ கணேசன் எம்.பி. கேட்டுக்கொண்டார்.

# வெசாக் பண்டிகை தினங்களில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

## 18,000 பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கையில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வெசாக் பண்டிகையையிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், இதற்காக 18,000க்கும் அதிகளவான பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும், பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார். இந்நிலையில் நாடெங்கிலும் 419 வெசாக் வலயங்களும் 321 வெசாக் தோரணங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன், 3,000க்கும் அதிகளவான தானசாலைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

இதேவேளை அனைத்து தானசாலைகளும் முழுமையான பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு சுகாதாரத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக தொழில் ஆணையாளருக்கு அதிகாரத்தினைக் கொண்டு, தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ்க் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த கொடுப்பனவு அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு உத்தேசித்துள்ளார் என அக்கட்டளைச் சட்டத்தின் 33(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர்.பி.ஏ.விமலவீர**
**செயலாளர்**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**"மெஹெவர பியெச"**
**தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05,**
**2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி**

**அட்டவணை**

தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2021 மார்ச் மாதம் 05 ஆம் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படல் வேண்டும்

**பகுதி II**

**தேயிலை வளர்த்தல் மற்றும் தேயிலை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I | நாளாந்த சம்பளம் (இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்கின்றது என்பதுடன் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. கொடுப்பனவிற்கும் ஏற்புடையதாகும் | ரூபா. 1350.00 |
| II | நாளாந்த விசேட படி | ரூபா.350.00 |
| III | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |
| IV | மேலதிக கிலோகிராமிற்கான விகிதம் | ரூபா. 1350.00 |

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

**அறிவித்தல்**

**இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலுக்கான சம்பளச்சபை**

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயமாகிய) 33(1) (அ) ஆம் பிரிவின் கீழ், தொழில் அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிய 2381/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான கட்டளையின் வாயிலாக தொழில் ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைக் கொண்டு, இறப்பர் பயிரிடல் மற்றும் பச்சை இறப்பர் பதனிடல் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள் தொடர்பாக கீழ் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த கொடுப்பனவு 33(2)ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதற்கு அளவினை அக்கட்டளைச் சட்டத்தின் 33(2) உத்தேசித்துள்ளார் என அக்கட்டளைச் சட்டத்தின் 33(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 (3) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.

இந்த முடிபு 2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்.

**ஆர். பி.ஏ. விமலவீர**
**செயலாளர்**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**

**"மெஹெவர பியெச" தொழில் திணைக்களம்**
**கொழும்பு 05,**
**2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி**

**அட்டவணை**

இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட முடிபுகள் 1949 ஆண்டு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிய 10047 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் உள்ள அட்டவணையில் உள்ளவாறு பிரசுரிக்கப்பட்டதுடன், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் 2021 மார்ச் 05 ஆம் திகதிய 2217/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் இறுதியாக வேறுபடுத்தப்பட்டதுமான முடிபுகள் 11 ஆம் பகுதிக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதியினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுதல் வேண்டும்.

**பகுதி II**

**இறப்பர் வளர்த்தல் மற்றும் உற்பத்தி செய்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள வேலையாட்களுக்கான கொடுப்பனவு நடைமுறை**

| இலக்கம் | விவரணம் | கொடுப்பனவு |
|---|---|---|
| I | நாளாந்தச் சம்பளம் (இத்தொகை நாளாந்த வரவு செலவுத் திட்ட நிவாரணப்படியை உள்ளடக்கின்றது என்பதுடன் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. கொடுப்பனவிற்கு ஏற்புடையதாகும் | ரூபா.1350.00 |
| II | நாளாந்த விசேட படி | ரூபா.350.00 |
| III | நாளாந்த மொத்தக் கொடுப்பனவு | ரூபா.1700.00 |
| Iv | மேலதிக கிலோகிராமிற்கான விகிதம் | ரூபா.80.00 |




லேக் ஹவுஸ் பௌத்த சங்கம் மற்றும் நிறுவன நிர்வாகத்தினர் இணைந்து ஏற்பாடு செய்திருந்த லேக் ஹவுஸ் “அமாதஹர” வெசாக் வலய பக்தி கீதம் நிகழ்வு நேற்று இரவு நடைபெற்றது. நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்ர காரியவசம், நிதி பணிப்பாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன, நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள மாகும்புர மற்றும் பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## ஆட்சேபிக்கும் கம்பனிகளின்...

அதற்கிணங்க நிதியமைச்சால் தற்போதைய வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றை கவனத்தில் கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய உச்ச சம்பளம் தொடர்பான மதிப்பீட்டை மேற்கொள்வது, அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட சம்பளத்தை வழங்குவது தொடர்பாக ஒவ்வொரு தோட்ட நிறுவனங்களிலும் காணப்படும் இயல் தன்மை சம்பந்தமாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அந்த வகையில் எந்த ஒரு தோட்ட நிறுவனமும் மோசமான முகாமைத்துவம் காரணமாக குறித்த சம்பளத்தை வழங்க முடியாத நிலை காணப்பட்டால், அவ்வாறான தோட்ட நிறுவனங்களுடனான குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் வகையில் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

கோவிட் சூழல், அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசியப் பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்தன. அதனை கவனத்தில் கொண்டு அரசாங்கம், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கியது.

அதற்கு சமனான சம்பள அதிகரிப்பு தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாததால் அவர்களது வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதுடன், அவர்களது போசனை மட்டமும் குறைவடைந்துள்ளது.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டுமென பெருந்தோட்டத்துறை தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. அதனை கவனத்தில் கொண்டே அரசாங்கம் சம்பள அதிகரிப்பை அறிவித்தது.

அந்த வகையில் ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் ஏனைய அமைச்சுகளின் பங்கேற்புடன் அது தொடர்பாக விரிவாக ஆராய்ந்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்வதற்கு விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு சொந்தமான 22 நிறுவனங்கள் இவ்வாறு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்கள் சம்பளத்தை கூட வழங்க முடியாத நிலையில் காணப்படுமானால், தொடர்ந்தும் அந்த நிறுவனங்களால் அதனை முன்னெடுத்துச் செல்ல முடியா விட்டால் நீண்டகால குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்து, அதனை சிறப்பாக முன்னெடுத்துச் செல்லக்கூடியவர்களிடம் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அது தொடர்பாக ஆராயுமாறே ஜனாதிபதி மேற்படி குழுவை நியமிக்க தீர்மானித்துள்ளதாகவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## சடுதியாக விலை...

கடந்தது. இந்நிலையில் சென்னையில் 22 கரட் ஆபரண தங்கத்தின் விலை பவுணுக்கு 880 ரூபாவாக குறைந்து, 54 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாவதாக, இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபரண தங்கம் கிராமுக்கு 110 ரூபா விலை குறைந்து, 6,750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன.

## கடன் மறுசீரமைப்புக்கான...

சீன எக்சிம் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்னெடுப்பதற்கான உச்சளவு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான இணைக்கப்பாட்டுக்கு வந்த பின்னர் இந்த ஒப்பந்த கைச்சாத்து நடைபெறுமெனவும், அவர் கூறினார். பணிப்பாளர் சபை மூலம் இலங்கைக்கான கடன் ஒத்துழைப்பு தொடர்பாக விரைவில் மீளாய்வு செய்யப்படவுள்ளதுடன், அந்த மீளாய்வுக்கு முன்னர் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## சீரற்ற காலநிலையால்...

மின்சார விநியோகம் தடைப்பட்டதாகவும், அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின் செயலிழப்புகளால் மின் விநியோகத்தை துரிதமாக வழங்குவது தொடர்பாக தாம் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதாகவும் இதற்காக வழமையான பணியாளர்களுக்கு மேலதிகமாக பணியாளர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக, மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

## உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு...

இணைந்து கொண்ட ஜனாதிபதி, அனைத்து பௌத்த மக்களுக்கும் வெசாக் பண்டிகை வாழ்த்து தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி, "இன்று உலகம் மூட நம்பிக்கையிலிருந்து விலகிச் செல்கிறது. அறிவியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தால் நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறி வருகிறது. குறிப்பாக, மருத்துவத்துறையும் தொழில்நுட்பத் துறையும் வளர்ச்சியடைந்துள்ளன. அதே நேரம் வானவியல் பற்றிய புதிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட அறிவின் வளர்ச்சியுடன் நாம் இன்னும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால் தேரவாத பௌத்தத்தை பின்பற்றுபவர்களுக்கும் அதன் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் இது ஒரு பிரச்சினையல்ல. தேரவாத பௌத்தத்தினூடாக இந்த பிரச்சினைகளை தீர்க்க முடியும். எனவே தேரவாத பௌத்தத்தின் உண்மையான நோக்கத்தை பாதுகாப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் அனைவருக்கும் வெசாக் வாழ்த்துகள் உரித்தாகட்டும்" எனத் தெரிவித்தார்.

## கண்டி, நுவரெலியா, இரத்தினபுரியில்...

எஸ்.பி.சி.சுகீஸ்வர தெரிவித்தார்.

மேலும் புலத்சிங்களவை சுற்றியுள்ள தாழ்நிலங்களில் களுகங்கையின் கிளை நதியான குடா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம் உயர்வடைவதாலும் கம்பஹா மற்றும் ஜாஎல பிரதேசங்களில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மாணவிக்கு...

கிறிஸ்ட்டுக்கு கற்பக விநாயகா மருத்துவ அறிவியல் கல்லூரியில் B.Sc., (Anesthesia) பட்டப்படிப்பை தொடர்வதற்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று அனுமதி வழங்கியுள்ளார்.

அத்துடன் இம்மாணவிக்கு முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய திருக்குறள் உரைநூல் மற்றும் பேனாவையும் தமிழ்நாட்டு முதலமைச்சர் பரிசாக வழங்கி, வாழ்த்தியுள்ளார்.

தேக்காட்டூர் இலங்கை தமிழர் மறுவாழ்வு இல்லத்தில் வசிக்கும் சுசந்த அஜித்குமார் மற்றும் திருமதி மரியகிறிஸ்டின் தம்பதியினரின் புதல்விகளான ஷரினாகிறிஸ்ட், மெனிஷாகிறிஸ்ட் ஆகியோர் கையடக்கத் தொலைபேசி கொள்வனவுக்காக தாம் சேமித்து வைத்த பணத்தை தமிழ்நாட்டு அரசாங்கத்தின் கொரோனா நிவாரண நிதிக்கு வழங்கினர்.

இந்நிலையில் அவர்களின் இந்த நற்செயலை பாராட்டி அவர்களின் கல்விக்கு உதவும் வகையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் கையடக்க கணினிகளை (TAB) வழங்கி வாழ்த்தினர்.

இந்நிலையில் மாணவி சு.ஷரினாகிறிஸ்ட் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 468 புள்ளிகள் பெற்றுள்ளார். இந்நிலையில் மருத்துவத்துறையுடன் தொடர்புடைய Para Medical பிரிவில் B.Sc., (Anesthesia) பட்டப்படிப்பை தொடர உதவு மாறு கோரி அம்மாணவியின் தாய் மரியகிறிஸ்டின், தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பினார்.

## கடும் காற்றுடன் கூடிய மழை...

விடுத்துள்ளது. தென்மேற்கு பருவமழை காரணமாக மழை வீழ்ச்சி மற்றும் காற்றின் வேகம் தொடர்ந்து அதிகரிக்குமெனவும், அத்திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகலாமென்பதுடன், மேலும் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் சில பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படலாமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இந்நிலையில் சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மேலும் சில பிரதேசங்களிலும் 150 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகலாமென்பதுடன், மேல், வடமேல் மாகாணங்களிலும் மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில பிரதேசங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யலாமெனவும், வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இதேவேளை நாட்டின் சில கடல் பிரதேசங்களில் கடும் காற்று வீசுமென்பதுடன், கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை மறு அறிவித்தல்வரை கடலுக்கு செல்வதை தவிர்க்குமாறும், வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## இந்திய பிரதமர் மோடிக்கு...

சென்னையின் புரசைவாக்கத்திலுள்ள என்.ஐ.ஏ. எனும் தேசிய புலனாய்வு அலுவலகத்துக்கு தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு உரையாடிய இந்நபர், இக்கொலை மிரட்டலை விடுத்துள்ளதாகவும், இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பிரசாரத்துக்காக வாகன பேரணியில் வரும் போது, அவரை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக இந்நபர் தொலைபேசி அழைப்பினூடாக தெரிவித்துள்ளதாகவும், இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## சர்வதேச மன்னிப்பு சபையிடம்...

கேள்வியெழுப்பினார். விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு வந்து 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்துக்கு எதிரான செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளதாகவும், அவர் கூறினார்.

மேலும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வியட்னா ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்டு செயற்படுவதாகவும், அவர் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், “இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த 30/11 பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. இதன் பின்னரே இராணுவத்துக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்தன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 30/1 பிரேரணையிலிருந்து விலகிய போதும், அப்பிரேரணையின் உள்ளடக்கங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை இராணுவத்தினரை சர்வதேச நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் காரியாலயம் குறிப்பிட்டுள்ளமை அவதானத்துக்குரியது.

## வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள...

வானிலை ஆய்வு மையங்கள் தெரிவித்துள்ளன.

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் அதனை அண்டிய மேற்கு மத்திய வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் இரவு தாழமுக்கம் உருவாகியுள்ளது. இந்த தாழமுக்கம் வடகிழக்கு திசையில் நகர்ந்து படிப்படியாக வலுவடைந்து, நாளை (25) அது சூறாவளியாக உருவாகலாமெனவும், அந்த நிலையங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சூறாவளிக்கு ஓமான் நாடு ரீ மெல் என்று பெயரிடப்படவுள்ளதுடன், இந்த சூறாவளி நாளை பிற்பகலில் வடக்கு ஒரிசா அல்லது மேற்கு வங்கப்பகுதியினூடாக கல்கத்தாவை ஊடறுத்து செல்லலாமென்று எதிர்பார்ப்பதாகவும், அந்த நிலையங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்மேற்கு கடல் பிராந்தியம் மற்றும் தென்கிழக்கு அரபிக்கடல் பகுதியில் காற்றானது 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நான்கு ISIS சந்தேகநபர்கள்...

ஊடக பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான நிஹால் தல்துவ தெரிவித்தார். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பொலிஸ் பயங்கரவாத விசாரணை பிரிவுகளின் பணிப்பாளர்கள் தலைமையிலான குழுவை பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் நியமித்துள்ளதாகவும், அவர் கூறினார்.

இந்த 4 இலங்கையர்களும் கடந்த 20ஆம் திகதி கைது செய்யப்பட்டதுடன், இவர்களை விசாரணை செய்ததில் பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 4 பேரில், நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொட்ட நௌபரென அழைக்கப்படும் நியாஸ் நௌபர் என்பவரின் மகனும் அடங்கியுள்ளதாகவும், இந்திய ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## ஜனாதிபதி ரணில் இன்று...

சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் பயிற்சி பிரிவையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

கிளிநொச்சி மருத்துவமனையில் பெண்கள் சுகாதாரப் பிரிவையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். வவுனியா மாவட்ட மருத்துவமனையில் இதயநோய் பிரிவையும், மாங்குளம் ஆதார மருத்துவமனையில் புதிய விடுதியையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.

மேலும் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தவுள்ளார்.

## கொரியமொழி பரீட்சை...

சித்தியடைந்தவர்களுக்கான மருத்துவ பரிசோதனை இம்மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

மேலும் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நேர்முக பரீட்சை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மாகாண அலுவலகங்கள், குடிவரவு வள நிலையங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம், 7ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்தது.

## ஈரான் ஜனாதிபதி ரைசியை...

இதன்போது இச்சிறுவனை அவர் கட்டியணைத்து முத்தமிட்ட புகைப்படம் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

"நான் வெற்றிலை கொடுத்து அவரை வரவேற்றேன், என்னை அவர் கட்டியணைத்தார், முத்தமிட்டார். இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம். அந்த அபூர்வமான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவருடைய மொழியில் என்னென்னவோ கூறினார். எனக்கு அவரது மொழி புரியாத போதும், அவர் என்னை பாராட்டுவது புரிந்தது.

இந்நிலையில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மரண செய்தியானது பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தவுடன் எனக்கு கூறப்பட்டது. அப்போது அதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. நான் அப்போது கண்ணீர் விட்டு அழுதேன்" என ஊடகங்களுக்கு அம்மாணவரான கய்துகித்ன கண்ணீர் மல்க கூறினார்.

# வெசாக்; 278 கைதிகள் விடுதலை

லோரன்ஸ் செல்வநாயகம்

வெசாக் பண்டிகையையிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகளிலிருந்து 278 சிறைக் கைதிகள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக, சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது. இவர்களில் 10 பெண்கள் அடங்குவதுடன், இவர்கள் அனைவரும் நேற்று மதியம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடக பேச்சாளருமான காமினி பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்
(24.052024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம் இலாகா மாற்றம். ஊதிய உயர்வு போன்றவை கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**ரி ஷ பம் :** மனை கட்டி குடியிருப்பது பற்றி சிந்திப்பீர்கள். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு. யோகம் உண்டு.

**மி துனம்:** பூர்வீக சொத்துக்களை விற்றுவிட்டு புதிய சொத்துக்களை வாங்கலாமா என்று சிந்திப்பீர்கள். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நினைவாக்கும் முயற்சி கைகூடும். பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவுக்கு வரும் .

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தொழிலிலும் நல்ல வருமானம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** தொழிலில் கூட்டாளிகள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். உத்தியோகத்தில் திடீர் இடம் மாற்றம் மனதை வாட வைக்கும்.

**கன்னி:** பெண் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**துலாம்:** பெண் வழி பிரச்சினைகள் அகலும். வெளிநாடு செல்ல எடுத்த முயற்சி கைகூடும். தொழில் முயற்சியில் கூடுதல் லாபம் கிட்டும்.

**விருச்சிகம்:** தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. நண்பர்கள் நல்ல தகவலை தருவர் .

**தனுசு:** படித்து முடித்து இது நாள் வரை வேலை இன்றி இருந்த பிள்ளைகளுக்கு இந்த காலகட்டத்தில் வேலை வாய்ப்பு அமையும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

**மகரம்:** அற்புதமான நேரமாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வில் வெளிவந்து சுய தொழில் தொடங்கலாம் என்று சிந்திப்பீர்கள் .

**கும்பம்:** ஆடை,ஆபரண சேர்க்கை உண்டு. வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகழ்வீர்கள்.

**மீனம்:** உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர். இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். எதிர்காலத்தை பற்றிய பயம் அகலும்.

## அமைச்சரவையில் எத்தகைய... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக தெரிவித்து பல ஊடகங்களினூடாக தகவல்கள் வெளியிடப்பட்டதால், சமூகத்தில் ஒரு குழப்பம் உருவாகியது. அது தொடர்பாக அமைச்சரவையிலும் கவனம் செலுத்தப்பட்டது.

வரவு, செலவு திட்டத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை ஜனாதிபதி அமைச்சரவையில் குறிப்பிட்டார். அந்த வகையில் அரசியலமைப்பின்படி இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அந்த ஜனநாயக முறைமையை பின்பற்றி ஜனாதிபதி செயற்படுவார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தாம் ஜனாதிபதி பதவியை பொறுப்பேற்ற தினத்திலிருந்து அரசியலமைப்பின்படி நடத்தப்பட வேண்டிய தேர்தல்கள் உரிய முறையில் நடத்தப்படும் என்பதை தொடர்ச்சியாக தெரிவித்து வந்துள்ளார்" எனத் தெரிவித்தார்.

## அரசாங்கத்துக்கு எதையும்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை...

அமித் ஜயசுந்தர தெரிவித்தார். இந்நிலையில் மே 27ஆம் திகதி முதல் ஜூன் 14ஆம் திகதி நள்ளிரவுவரை விண்ணப்பம் கோரல் முன்னெடுக்கப்படுமெனவும், அவர் கூறினார். இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல் ஒன்லைன் மூலம் முன்னெடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை கல்வி பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை பெறுபேறுகள் செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் வெளியிடப்படுமெனத் தெரிவித்த அவர், அப்பரீட்சையின் சில பாடங்களுக்கு செயன்முறை பரீட்சை நடத்த வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

மூன்று கட்டங்களாக பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்த அவர், முடிந்தளவு விரைவாக பெறுபேறுகளை வெளியிட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் கூறினார்.

# கிழக்கின் குரல்



## கல்முனை மாநகர வீதி இரு வழிப்பாதையாக மாற்றம்

(மாளிகைக்காடு குறூப், ஒலுவில் விசேட நிருபர்கள்)



கல்முனைப் பிரதேசத்திலுள்ள ஒரு வழிப் பாதை இரு வழிப்பாதையாக நேற்று (23) உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது.

இந்நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தலைமையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திகவின் நெறிப்படுத்தலில் ஆரம்பமானதுடன் அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச். எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு இருவழிப் பாதையை திறந்து வைத்தார்.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸின் வேண்டுகோளில் ஒரு வழிப்பாதை (டமாஸ் ஜுவலரி சந்தியில் இருந்து கொமர்சியல் வங்கி வரையான ஒரு வழிப்பாதை) இரு வழியாக மாற்றப்பட்டு பொதுப் போக்குவரத்துக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எச். அசீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஜெளஸி அப்துல் ஜப்பார், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரிஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா, பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து

## 6 வயது சிறுமி ஸ்தலத்தில் உயிரிழப்பு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



பருத்தித்துறையைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் மட்டக்களப்பு நோக்கி பயணித்த காரொன்று திருகோணமலை ஈச்சலம்பற்று வட்டவன் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் 6வயது சிறுமி ஸ்தலத்திலேயே உயிரிழந்ததுடன் 4 வயது சிறுவன் படுகாயமடைந்துள்ளதாக ஈச்சலம்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நிதர்சன் ஆதித்யா என்ற 6 வயதுடைய சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் கணவனும் மனைவியும் எந்தவித காயமும் இன்றி உயிர் தப்பியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சிறுவன் தற்சமயம் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மான், பன்றி இறைச்சியுடன் ஒருவர் கைது

தோப்பூர் குறூப் நிருபர்

திருகோணமலை மூதூர் நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மாவிலாறு பிரதேசத்தில் சட்டவிரோதமாக மான்,பன்றி இறைச்சியுடன் ஒருவர் வனஜீவராசிகள் உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது ஒரு இலட்சம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மூதூர் நீதவான் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோதமாக 38 கிலோகிராம் பன்றி இறைச்சி, 13 கிலோகிராம் மான் இறைச்சி என்பவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் வனஜீவராசிகள் உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேகநபரை ஒரு இலட்சம் ரூபா பிணையில் செல்வதற்கு நீதவான் உத்தரவிட்டார்.

## கண்ணபுரம் ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

கிழக்கிலங்கை, மட்டுமாநகர், 35ஆம் கிராமம், கண்ணபுரம், அருள்மிகு ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய பிரதிஷ்ட பஞ்ச குண்ட மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2024.06.09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2024.06.07ஆம் திகதி வெள'ளிக்கிழமை மஹா கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 2024.06.07ஆம் திகதி சனிக்கிழமை எண்ணெய் காப்பு சார்த்தும் நிகழ்வு இடம்பெறும்.



ஐக்கிய தேசியக் கட்சியின் மண்முனைப்பற்று வலய காரியாலயம் பாலமுனையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளர் சுதர்சன் மற்றும் பிரமுகர்கள் கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டதுடன் மண்முனைப் பற்று ஐ.தே.கட்சி அமைப்பாளர் ஏ.ரி.எம். அஸ்மி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

### ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ்

## திருகோணமலை சிறையிலிருந்து 8 கைதிகள் விடுதலை

(கிண்ணியா மத்திய, கந்தளாய் நிருபர்கள்)



வெசாக் தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ், திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து எட்டு கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்கள் செய்தவர்களும் தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறைக்கு சென்றவர்களுமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

திருகோணமலை சிறைச்சாலையின் பிரதான சிறைச்சாலை அதிகாரி ஆர். மோகனராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறைச்சாலை புனர்வாழ்வு உத்தியோகத்தர் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஒலுவில் அல்–ஹம்றா மகாவித்தியாலய மாணவன் தேசிய மாணவச் சிப்பாய் படையணியில் பதவியுயர்வு

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)





பாதுகாப்பு அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு இணைந்து பாடசாலை மட்டத்தில் சிறந்த ஒழுக்கமுள்ள ஆளுமையான தலைவர்களை உருவாக்கும் நோக்கில் உருவான பாடசாலையின் தேசிய மாணவச் சிப்பாய் படையணியில் ஒலுவில் அல் ஹம்றா மகாவித்தியாலய தேசிய மாணவச் சிப்பாய் படையணியைச் சேர்ந்த மாணவன் ஏ.என்.ஸராபத் இஸ்னி, பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக சார்ஜன்ட் நிலையில் இருந்து (CQMS) (Company Quarter Master Sergeant) நிலைக்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இம்மாணவனுக்கான பதவியுயர்வு வழங்கும் நிகழ்வு அம்பாறை 17 ஆவது படைப்பிரிவில் கட்டளையிடும் அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

இம்மாணவனை ஊக்குவித்த, பல்வேறு வழிகாட்டல்களை வழங்கிய பாடசாலை அதிபர் அஷ் ஷெய்க் யு.கே. அப்துர் ரஹீம் மற்றும் ஆலோசனை வழங்கிய இணைப் பாடவிதானத்திற்குப் பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன், உடற்கல்வி பாட சிரேஷ்ட ஆசிரியர் பாடசாலை பொலிஸ் கெடற் பிரிவின் பொறுப்பாசிரியர் பிளட்டூன் கொமாண்டர் (PLATOON COMMANDER) லெப்டினன்ட் ஏ.எம்.எம். கியாஸ், மேலும் இம்மாணவனுக்கு தொடர் பயிற்சியினை வழங்கிய நிந்தவூர் பொலிஸ் நிலைய பொலிஸ் கெடற் பயிற்றுவிப்பாளர் எம். சுதர்சன் (PC84941), பாடசாலையின் கெடற் பிரிவுக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்புகளை வழங்கும் உடற்கல்வி ஆசிரியர் ஆர். நௌஸாத், விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஏ.அஸ்மத் ஸஹி ஆகியோருக்கு பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளது.

## வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் 2500 இற்கு மேற்பட்டோருக்கு நேற்று அன்னதானம்

(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

### வெசாக் தினத்தை முன்னிட்டு காராளசிங்கம் சகாதேவா குடும்பத்தினர் அனுசரணை





வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்திய வெசாக் பௌர்ணமிதின சிறப்பு தன்சல நிகழ்வானது வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று பகல் 12.00 மணி முதல் பி.ப. 2 மணி வரை நடைபெற்றது.

வாழைச்சேனையைச் சேர்ந்த காராளசிங்கம் சகாதேவா குடும்பத்தினரின் அனுசரணையுடன் கடந்த பல வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்ற இந்த அன்னதான நிகழ்வானது இடைநடுவில் கொரோனா காலப்பகுதியில் தடைப்பட்டு பின்னர் இவ்வருடம் முதல் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலேயே உணவு தயாரிக்கப்பட்டு 2500 இற்கு மேற்பட்டவர்களுக்கான உணவுப் பொதிகள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன. மட்டக்களப்பு சிறைச்சாலைக்கும் இங்கிருந்து 650 இற்கு மேற்பட்ட உணவுப்பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன. மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, திருகோணமலை மற்றும் பாசிக்குடாவுக்கு செல்கின்ற பிரதான மையப்பகுதியில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளதால் பேருந்து மற்றும் வாகனங்களில் சென்ற பயணிகளுக்கும் பிரதேசத்தினைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் அன்னதான நிகழ்வின்போது உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.


இந்நிகழ்வில் வாழைச்சேனைக்குரிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எல்.எம். ஜெமீல் மற்றும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவுடன் அவரது குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

பொலிஸ் அதிகாரிகள், வாழைச்சேனை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், கிராமசேவை உத்தியோகத்தர் கா. ஜெகதீஸ்வரன், நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய கா. சகாதேவா எனப் பலர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

## கடலுக்கு சென்ற மீனவர்கள் இருவரை காணவில்லை

(தம்பலகாமம் குறூப் நிருபர்)





திருகோணமலையில் சல்லி கடல் பகுதியிலிருந்து கடலுக்கு சென்ற மீனவர்கள் இருவரை காணவில்லையென அவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 ஆம் திகதி சல்லி பிரதேச த்திலிருந்து காலை 10 மணியளவில் கடலுக்கு சென்ற மீனவர்கள் இருவர் மாயமாகியுள்ளனர். மீனவர்கள் வட்டாரம் 2 சல்லி பிரதேசத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 45), முருகையா சுஜந்தன் (வயது 22) என்பவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர். இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லையென உறவினர்கள் தெரிவிக்கின்றனர். மீனவர்களை தேடி சல்லி பிரதேச மீனவர்கள் பத்துக்கும் மேற்பட்டவர்கள் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பில் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மீனவர்க ளின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்

## கட்டாயக் கல்விக் குழுவினருக்கு நியமனக் கடிதம் வழங்கிவைப்பு

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழுவில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் (22.05.2024) வலயக் கல்வி அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் முறைசாரா கல்விப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.முகைதீன் பாவா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாடசாலைகளில் கட்டாயக் கல்வி குழுவில் கடமையாற்ற தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்களை அதிபர்களிடம் வழங்கி வைத்தார்.

1963/30ஆம் இலக்க 2016.04.20ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பிரகாரம் இந்நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இக்குழுவினர் 2024.01.01ஆம் திகதி முதல் 2025.12.31ஆம் திகதி வரை இரண்டு வருடங்களுக்கு செயற்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.





இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் மாஸ்டர் கவுன்சிலர் எம்.ஏ.தாஹிர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான எம்.சாஹிர், எம்.ஐ.சப்ரி மற்றும் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை கல்விக் கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.


முகம்மது றியாஸ்
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 15

## குறள் தரும் சிந்தனை



விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று

விருந்தினராக வந்தவர் வீட்டின் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்பது சாவாமருந்தாகிய அமிழ்தமே ஆனாலும் அது விரும்பத்தக்கது அன்று.

# நாட்சம்பள உயர்வை உறுதிப்படுத்த மற்றொரு வர்த்தமானி வெளியீடு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாட்சம்பளம் 1700 ரூபா என்பதை உறுதிப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் செயலாளரது கையெழுத்துடன் இவ்வர்த்தமானி விடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வர்த்தமானியின்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்க வேண்டும். ஆனாலும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன்வைத்து ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள் என தொழிற்சங்க நடவடிக்கைகளையும் அகிம்சை வழிப் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். பெருந்தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் நாட்சம்பள அதிகரிப்பு குறித்து முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தைகளை பல தடவைகள் முன்னெடுத்துள்ளன.

இருந்தும் கூட பெருந்தோட்டக் கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைப்படி சம்பள உயர்வை வழங்க மறுத்து வருகின்றன. இது நியாயமற்ற செயற்பாடு என்பதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

அதேநேரம், நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் நாட்டின் ஒவ்வொரு பிரிவினருக்கும் அந்தந்த மட்டங்களுக்கு ஏற்ப நிவாரணங்களும் சலுகைகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. குறிப்பாக அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இவ்வாறான நிவாரணங்கள், சலுகைகள் எதுவும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கென வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், இவ்விடயத்தில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெருந்தோட்ட தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக ரூபா 1700 வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலிய மேதின பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டதோடு, இதன் நிமித்தம் விஷேட வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார். அதற்கு ஏற்ப பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்கும் விஷேட வர்த்தமானி மேமாதம் முதலாம் திகதி தொழில் ஆணையாளரால் விடுக்கப்பட்டது.

இந்த சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஏதாவது ஆட்சேபனைகள் அபிப்பிராயங்கள் தெரிவிப்பதாயின் அதற்கென முதலாளிமார் சம்மேளனத்தினருக்கு 15 நாட்கள் கால அவகாசமும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த 15 நாட்கள் காலப்பகுதிக்குள் முதலாளிமார் சம்மேளனம் உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை.

இவ்வாறான சூழலில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை ரூபா 1700 ஆக அதிகரிப்பதை உறுதிப்படுத்தி தொழில் அமைச்சின் செயலாளரது கையெழுத்துடன் மற்றொரு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வர்த்தமானி அறிவித்தலையும் தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளையும் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் வரவேற்று பாராட்டியுள்ளனர்.

ஆனாலும் அரசாங்கம் குறிப்பிடுவது போன்றோ விடுக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்படியோ தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை அதிகரிக்க முடியாதென, சில தோட்டக் கம்பனிகள் அரசாங்கத்திடம் முறைப்பாடுகளை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பின்புலத்தில் இச்சம்பள உயர்வு வர்த்தமானியை நடைமுறைப்படுத்தும் வகையில் மூன்று கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (22) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பித்துள்ளார். அந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமும் அளித்துள்ளது.

பொருளாதார உறுதி நிலைப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு, தற்போதைய வாழ்க்கைச் செலவு மற்றும் அண்மைய பொருளாதார நெருக்கடியின் விளைவுகளைக் கருத்தில் கொண்டு பெருந்தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியத்தை மதிப்பிடுதல் அவசியமானது.

இவ்வாறு மதிப்பிடப்படும் சம்பளத்தை வழங்கவென ஒவ்வொரு தோட்ட நிறுவனமும் கொண்டுள்ள திறனை ஆராயவும் குழுவொன்று நியமிக்கப்பட உள்ளது. சம்பளத்தை வழங்க முடியாத நிலையில் பலவீனமான முகாமைத்துவத்துடன் செயற்படும் நிறுவனங்களின் குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்குத் தேவையான வகையில் சட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட சில விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் எந்தவொரு தோட்ட நிறுவனமும் இந்த சம்பள உயர்வை வழங்கத் தவறினால், அத்தகைய தோட்ட நிறுவனங்களுடன் செய்துகொண்ட காணி குத்தகை ஒப்பந்தங்களை இரத்துச் செய்யக்கூடிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் மூன்று கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளது.

ஆகவே இந்நடவடிக்கைகள் அனைத்தும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பள உயர்வை 1700.00 ரூபாவாக பெற்றுக்கொடுப்பதில் அரசாங்கம் உறுதியாக செயற்படுவதை எடுத்துக் காட்டுகிறது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# இந்தியா எங்கும் பரவிக் கிடக்கும் பண்டைக்கால பௌத்த தலங்கள்



இந்திய மக்கள் இறைவழிபாட்டில் ஆர்வம் அதிகம் உள்ளவர்கள். பௌத்த மதத்தை பின்பற்றும் மக்களும் ஏராளமாக உள்ளனர். பௌத்த மக்கள் தரிசனத்துக்காக செல்ல வேண்டிய தலங்கள் இந்தியாவில் அதிகமாக உள்ளன.

இந்தியாவில் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் குறைவாகவே இருந்தாலும், அங்கு புத்தர் பெருமானுக்கென அமைக்கப்பட்டுள்ள கோயில்கள் அதிகம்.

அருணாச்சல பிரதேசத்தில் உள்ள புத்தர் சிலைதான் இந்தியாவில் இருக்கும் பெரிய சிலைகளில் ஒன்றாகும். இது 17 ஆவது நூற்றாண்டில் கட்டப்பட்டதாகும். இந்த புத்தர் சிலையின் உயரம் 28 அடி ஆகும்.

மத்திய பிரதேசத்தில் உள்ள ஒரு ஸ்தூபி கற்களால் ஆனதாகும். இதற்காகவே இது புகழ்பெற்ற இடங்களில் ஒன்றாக திகழ்கிறது. 3 ஆம் நூற்றாண்டில் அசோகரால் புத்த சமயத்தை பரப்புவதற்கு கட்டப்பட்ட ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும்.

சார்நாத் என்ற வாரணாசியில் உள்ள ஆலயத்தில் கௌதம புத்தர் முதன் முதலில் போதனையை மக்களுக்கு போதித்தார் என்று நம்பப்படுகிறது. இதனால் இந்த ஆலயம் மற்றவற்றை விட மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும். இங்கு வேண்டுதல் வைத்தால் உடனடியாக பலன் கிடைக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

அஜந்தா மற்றும் எல்லோரா குகை மஹாராஷ்டிராவில் புகழ் பெற்றது. குகை கோயிலான இங்கு வடிவமைக்கப்பட்ட புத்தரின் சிலை உலக பிரசித்தி பெற்றதாகும். ஆகையால் போக வேண்டிய ஆலயங்களில் இது முக்கியமான ஒன்றாகும்.

காஜிராஹோ என்ற மத்திய பிரதேசத்தில் உள்ள கோயில் சிற்பக்கலைக்கு பெயர் போனது ஆகும். சண்டேலா மன்னர்கள் காலத்தில் வடிவமைக்கப்பட்ட இந்தக் கோயில் பௌத்த மற்றும் ஜெயின் சமயத்தை சேர்ந்தவர்கள் வழிபாடும் வகையில் கட்டப்பட்டுள்ளது.





தர்மஷாலா என்பது இமாச்சல பிரதேசத்தில் உள்ள தலமாகும். இந்த நகரம் திபெத்திய மக்களை அதிகம் கொண்டதாகும்.

அடுத்ததாக தக்சன் சோலிங் கோயில் என்பது புத்த மதத்தை பின்பற்றுவர்களுக்கான ஆன்மிக மையமாக விளங்குகிறது. இமயமலை அருகில் இத்தலம் இருப்பதால் இயற்கை வளம் கொஞ்சும் இடமாக இது உள்ளது.

# போதைப்பொருள் அச்சுறுத்தலில் இருந்து இளைஞர்களை காப்போம்!

## அக்கரைப்பற்றில் தேசிய இளைஞர் வெசாக் விழா 2024



நாட்டில் இளைஞர் சமூகத்தினரிடையே சமய நல்லிணக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், அனைத்து இன மக்களினதும் முக்கிய சமய மற்றும் கலாசார நிகழ்ச்சிகளை கொண்டாடுவதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் செயற்பட்டு வருகிறது. அதன் ஊடாக வேறுபட்ட கலாசாரத்தைக் கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு இந்நாட்டின் கலாசாரத்தை நன்கு புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுள்ளது.




இதன்படி, ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில், இந்நாட்டின் சிங்கள பௌத்த மக்களின் முக்கிய மதவிழாவான வெசாக் பண்டிகையை கொண்டாடுவதற்கும், பிரதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு மேற்கொண்டு வருகின்றது.

இதன்படி, தேசிய இளைஞர் வெசாக் வேலைத்திட்டம் 24 மற்றும் 25 ஆகிய தினங்களில் நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலக மட்டத்திலும் அமுல்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலும் 24 மற்றும் 25 ஆம் திகதி 'போதைப்பொருளின் அச்சுறுத்தலில் இருந்து இளைஞர்களைக் காப்போம்' என்ற தொனிப்பொருளில் செயல்திட்டம் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன மற்றும் பொலிஸ் மாஅதிபர் ஆகியோருக்கிடையில் போதைப்பொருளின் அச்சுறுத்தலில் இருந்து இளைஞர்களை மீட்டல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில், கலந்துரையாடல் ஏற்பாடுகள் பொலிஸ் நிலையத்துடன் இணைந்ததாக நடைபெறும்.

24,25 ஆம் திககளில் பக்ப் பாடல், தாகசந்தி போன்ற நிகழ்ச்சிகளை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டிலும் இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத் தலைமையிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை போன்று நாட்டில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது விசேட நிருபர்...

# சஹ்வா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு விஜயம் செய்த மலேஷிய உயர்ஸ்தானிகர்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் இயங்கி வரும் சஹ்வா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு மலேஷிய உயர்ஸ்தானிகர் விஜயம் செய்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ. ஆர்.எம். மன்சூரின் புதல்வரும், கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான ரஹூமத் மன்சூரின் வேண்டுகோளையடுத்து மலேஷியா நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், மற்றும் வை. டப்ளியூ. எம். ஏ. அமைப்பின் தலைவி பவாஷா தாஹா ஆகியோர் அக்கல்லூரிக்குச் சென்று அங்கு நிலவும் தேவைகள் குறித்து கவனம் செலுத்தினர்



அரபுக் கல்லூரியின் வளாகம், பொதுநூலகம் என்பவற்றைப் பார்வையிட்ட அதிதிகள் கல்லூரயில் கல்வி பயிலும் மாணவர்களுடனும், நிருவாகத்தினருடனும் கலந்துரையாடினர்.



மலேசியாவிலுள்ள சிறந்த பல் கலைக்கழகமொன்றுடன் ஒன்றிணைத்து கல்வித் தரத்தினை மேம்படுத்தி எதிர்காலத்தில் சிறந்த மாணவிகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை செய்து தருமாறு கல்லூரியின் நிருவாகத்தினர் உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக் கொண்டனர்.

எம்.எப்.றிபாஸ்...
(பாலமுனை தினகரன் நிருபர்)

# காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் ஓய்வு

காத்தான்குடி. மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 2012.01.26 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் கல்வி, பௌதிகவள அபிவிருத்தியிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தன்னை முற்றாக அர்ப்பணித்து கடமையாற்றிய அதிபர் திருமதி ஜெஸீமா முஸம்மில் நாளை 25.05. 2024 இல் அரசபணியிலிருந்து ஓய்வு பெறுகின்றார்.

இவர் மர்ஹூம்களான மீரா முகைதீன்_ ஆமினா உம்மா தம்பதிகளுக்கு புதல்வியாக 26.05.1964 இல் பிறந்தார்.தனது ஆரம்பக் கல்வியை மட்/மம/மெத்தைப் பள்ளி வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர்தர, கல்வியை மட்/மம/ மத்திய கல்லூரி தேசிய பாடசாலையிலும் கற்றார். இவர் தனது பாடசாலைக் காலத்தில் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் மிகவும் திறமையாக செயற்பட்டு ஒரு சிறந்த விளையாட்டு வீராங்கனையாக திகழ்ந்தார்.



1985 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கலைமாணி பட்டத்தை பெற்றுக் கொண்டார். 1987 இல் நடைபெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட இவர் 03.10.1988 இல் மட்/மம/ மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் முதலாவதாக கடமையை ஏற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் அல்ஹிறா வித்தியாலயத்திலும், மீராபாலிகா தேசிய பாடசாலையிலும் தனது கடமையை மேற்கொண்டார். தனது 36 வருட சேவைக் காலத்தில் 31 வருட காலம் மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையிலேயே அரசியல்,வரலாறு பாட ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, கடமை நிறைவேற்று அதிபராக கடமையாற்றி 2012.01.26 இல் அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று SLPS 2 II அதிபராக கடமையை பொறுப்பேற்றார். SLPS2, SLPS 1 அதிபராக பல பதவி உயர்வுகளை பெற்று தான் முதலில் நியமனம் பெற்ற பாடசாலையில் இருந்தே ஓய்வு பெற்றுச் செல்கிறார்.

மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இவர்கள் அதிபராக கடமையாற்றிய காலம் வரலாற்றில் ஒரு பொற்காலமாகும். தன்னுடன் கடமையாற்றும் அதிபர் மற்றும் ஆசிரியர் குழாத்துடனும், மாணவர்களுடனும்,கல்வி சாரா ஊழியர்களுடனும், பாடசாலை சமூகத்துடனும் மிகவும் அன்பாக பழகினார்.

இவர் அப்பாடசாலையின் அபிவிருத்திக்காக ஆற்றிய பணிகள் ஏராளம். பாடசாலை மாணவர்களின் கல்வித்தரம் உயர்வதற்கு அயராது பாடுபட்டார்.

ஷகீலா அப்துர் ரஹ்மான்...
பழைய மாணவர் சங்க செயலாளர்

# சூழலைப் பாதுகாத்து பூமியை வளப்படுத்துவோம்!

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



மனிதனைத் தனது பிரதிநிதியாக இப் பூமியில் படைத்ததாக அல்லாஹுத் தஆலா, இந்தப் பூமியை நிர்வகிக்கின்ற பொறுப்பு மனிதனுக்கு சாட்டப்பட்டிருக்கிறது. இப்பொறுப்பை மனிதனுக்கு வழங்கிய அல்லாஹ்வை ஏற்றுக்கொண்ட முஸ்லிம்களுக்கு இப்பணி கடமையாக மாறுகிறது.

பூமியை நிர்வகிப்பதில் மனித குலம், விலங்கினங்கள், மரம் செடி கொடிகள், நீர்நிலைகள், மலைகள் என அனைத்துமே அடங்குகின்றன. இவை ஒவ்வொன்றையும் முறையாக நிர்வகிப்பதன் ஊடாக பூமியின் தட்ப வெப்ப நிலைகளைப் பேணி அதனை வாழ்வதற்கான சிறந்த இடமாகப் பேண வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் இருக்கிறது. வானங்களையும் பூமியையும் அதற்கு மத்தியில் உள்ளவைகளையும் நாம் வீணுக்காகப் படைக்கவில்லை (அல்குர்ஆன் 44:38) என அல்லாஹுத் தஆலா கூறுகிறான்.

எனவே அல்லாஹ்வுடைய படைப்புக்களில் எதனையும் வீணாக்காமல் நிர்வகிப்பதில் அவனுடைய பிரதிநிதியாகிய மனிதன் பொறுப்புடன் செயற்படுவது மிகவும் அவசியமானது.

அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் நிறைவேற்ற வேண்டிய முக்கியமான பொறுப்பு சுற்றுச்சூழல் பற்றியதாகும். மனிதனைச்சூழ்ந்து காணப்படும் உயிருள்ள, உயிரற்ற கூறுகள் அனைத்துமே சுற்றுச்சூழலாக விளங்குகிறது. அந்த வகையில் அல்குர்ஆனின் பல அத்தியாயங்கள் சுற்றுச்சூழலில் உள்ளவற்றைப் பெயர்களாகக் கொண்டுள்ளன. அன்ஆம் (கால் நடைகள்), அஃராப் (சிகரங்கள்), நஹ்ல் (தேனீ), நம்ல் (எறும்பு), அன்கபூத் (சிலந்தி), ஃபீல் (யானை), த்தீன் (அத்தி), என்பன இதற்கான சில எடுத்துக் காட்டுகளாகும்.

இந்தப் படைப்புக்கள் பூமிப் பரப்பில் ஏன் படைக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கத்தையும் அல்லாஹ்தஆலா தருகின்றான். பூமி அசையாதிருப்பதற்காக அவன் அதன் மீது உறுதியான மலைகளை அமைத்தான் (அல் குர்ஆன் 16:15) என மலைகள் படைக்கப்பட்டதன் நோக்கத்தை அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

இன்னும் குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும் அலங்காரமாகவும் படைத்தான். (அல் குர்ஆன் 16:08) என இவற்றின் பயன்பாட்டைக் கூறுகிறான். தேனீ ஒவ்வொரு பூவிலிருந்தும் புசித்து தனது இறைவன் அதற்கு அறிவித்த எளிதான வழியில் தன்னுடைய கூட்டுக்குள் ஒடுங்கி விடுகிறது. இதனால் அதன் வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய பானம் (தேன்) வெளியாகின்றது. அதில் மனிதர்களுக்கு நிவாரணம் இருக்கிறது (அல் குர்ஆன் 16:69) எனக் கூறுவதன் மூலம் தேனீயினதும் பூக்களதும் பயன்பாடுகளை விளக்குகிறான்.

அவனே வானத்திலிருந்து மழையை பொழியச் செய்கிறான். அதிலிருந்து உங்களுக்கு அருந்தும் நீரும் இருக்கிறது. அதிலிருந்து உங்களது கால்நடைகளை மேய்ப்பதற்கான மரங்களும் புற்பூண்டுகளும் உண்டாகின்றன. அதனைக் கொண்டே விவசாயப் பயிர்களையும் ஸைத்தூன், பேரீத்த மரங்களையும் திராட்சைக் கொடிகளையும் இன்னும் எல்லா வகைக் கனிவர்க்கங்களையும் அவன் உங்களுக்காக விளைவிக்கிறான் (அல் குர்ஆன் 16:10,11).

அல்லாஹுத்தஆலாவின் இவ் வசனங்கள் ஊடாக சுற்றுச்சூழலில் படைத்திருப்பவற்றின் பயன்பாடுகளைக் குறிப்பிட்டு அதனூடாக அவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டுகிறான்.

நாம் பூமியை சீராக வளப்படுத்திய பின்னர் அதில் நாசம் செய்யாதீர்கள் (அல் குர்அன் 7:56) என அல்லாஹ் கடுமையாக உத்தரவிடுவதிலிருந்து சுற்றுச்சூழலில் உள்ளவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிகிறது. அல்லாஹ் ஏற்கனவே படைத்து வைத்திருக்கின்ற ஒழுங்கில் தான் பூமி வளப்படுகிறது என்பதையும் அதனை நாசம் செய்வதன் ஊடாக பூமியின் ஒழுங்கு சீர்குலைகிறது என்பதையும் எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

கடலிலும் தரையிலும் ஏற்படும் குழப்பங்கள் எல்லாம் மனிதர்கள் தமது கைகளால் தேடிக் கொண்டவையே. அவர்கள் அதிலிருந்து திரும்பி விடும் பொருட்டு அவர்கள் செய்தவற்றில் சிலதை அவர்கள் சுவைக்கும்படி அவன் செய்கிறான். (அல் குர்ஆன் 30:41).

இந்த வகையில் அல்லாஹுத்தஆலா வளப்படுத்தி வைத்தவற்றில் மனிதன் ஏற்படுத்திய குழப்பங்களின் விளைவுகளையே மனிதன் அனுபவித்து வருகின்றான். கடுமையான கோடை, பெரும் வெள்ளம் என சடுதியான காலநிலை மாற்றத்தினால் உலகம் எதிர்நோக்கி வரும் தீய விளைவுகள் அனைத்துமே மனிதனின் மோசமான செயற்பாட்டால் உருவாகியவையே. அல்லாஹ் உருவாக்கி வைத்த பசுமையான காடுகளையும் மரங்களையும் மனிதன் அழிக்கத் தொடங்கியதன் விளைவை இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. மழையும் வெய்யிலும் உலகை வளப்படுத்திய காலம் மாறி தற்பொழுது அவை அழிவைக் கொண்டு வரும் சாதனங்களாக உருவெடுத்துள்ளன.

இஸ்லாம் யுத்த சமயங்களில் கூட பயன் தரும் மரங்களை வெட்டுவதற்கு அனுமதிக்கவில்லை. யுத்த களத்தில் சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள், மத ஆலயங்கள், பயன்தரும் மரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என நபி (ஸல்) அவர்கள் யுத்த களத்துக்குச் செல்லும் போர் வீரர்களுக்கு உத்தரவிடுவார்கள். அதேபோல நாளை உலகம் அழியப் போகிறது என்ற நிலையிலும் உனது கையில் ஒரு வித்து இருந்தால் அதையும் நாட்டி விடு என நபியவர்கள் கூறியிருக்கிறார்கள். கபுரிலே ஒருவர் வேதனை செய்யப்பட்டதை நபியவர்கள் செவியுற்ற வேளையில் அவனது கப்ரின் வேதனையைத் தணிக்கும் வகையில் அதன் மீது பச்சைத் தாவரங்களை நடும்படி தனது தோழர்களை ஏவியுள்ளார்கள்.

இவை அனைத்தும் இயற்கையில் உள்ள மரம், செடி கொடிகளைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதினால் நன்மை ஏற்படும் காலமெல்லாம் மனிதனுக்கு நன்மையே விளைகிறது. அநியாயம் செய்யும் நோக்கமோ அத்துமீறும் நோக்கமோ இன்றி யாரேனும் ஒரு கட்டடத்தைக் கட்டினாலோ, அல்லது ஒரு பயிரை நட்டாலோ அதனைக் கொண்டு ரஹ்மானுடைய படைப்புக்கள் நன்மையடையும் காலமெல்லாம் அவருக்கு நிலையான நற்கூலி கிடைத்துக் கொண்டேயிருக்கும் (ஆதாரம்: அஹ்மத்) என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இவை சூழலில் இருந்து அகற்றப்படுவதனால் பூமியில் மழை வீழ்ச்சி பாதிக்கப்பட்டு பூமியின் ஒழுங்கு சீர்குலைகிறது என்பது கண்கூடு. இது மனிதன் செய்கின்ற தவறினால் அவன் சுவைப்பதாகும். இதனை இஸ்லாம் பாவம் எனக் கருதுகிறது. அதனால் தான் மழை தடைப்படும் போது அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரும்படி இஸ்லாம் கூறுகிறது. மனிதன் சூழலுக்குச் செய்த அநியாயத்திலிருந்து அவன் மீண்டு வர வேண்டும் என்பதனையே இது எடுத்துக்காட்டுகிறது.

பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து பூமியை நிர்வகிக்க வேண்டிய மனிதனின் முக்கிய கடமையாக சூழலைப் பேணுவது அமைகிறது. அவன் இந்தப் பணியைச் சரிவரச் செய்யாத போது அதனால் பாதிக்கப்படுகின்ற விலங்கினங்கள், தாவரங்கள் அனைத்தும் அனுபவிக்கின்ற துன்பத்துக்கு அவன் பொறுப்புச் சொல்ல வேண்டியவனாகிறான்.

எனவே ஒவ்வொரு மனிதனும் சூழல் தொடர்பிலான தனது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும். இதனை மறந்து செயற்படுபவர்களுக்கு அவன் ஞாபகமூட்டி அடுத்தவர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். இப் பொறுப்பில் மனிதன் தவறுவிடும் போது அவன் தன்னைத் தானே அழித்துக் கொண்ட பாவத்துக்குள்ளாகிறான் என்பதையும் கருத்தில் கொள்ளத் தவறலாகாது.

பியாஸ் முஹம்மத்...

# இஸ்லாம் வெறுக்கும் சோம்பல்



சோம்பல் மிக்கவர்கள் படுக்கையைவிட்டு மட்டுமல்லாமல், உட்கார்ந்து விட்டால் இருக்கையை விட்டும் எளிதாக எழுந்திருக்க மாட்டார்கள். சோம்பல் மிக்கவர்கள் தானும் சலித்துக் கொள்வார்கள்; மற்றவர்களையும் சலிப்பூட்டுவார்கள். இவ்வாறு சோம்பலைப் பற்றிக் கூறிக் கொண்டே போகலாம்.

இப்படிப்பட்ட சோம்பலைப்பற்றியும், சோம்பேறிகளைப் பற்றியும் இஸ்லாம் என்ன கூறுகிறது என்பதை நோக்குவது அவசியம். அல்லாஹ் தன் திருமறையின் பல இடங்களில் நயவஞ்சகர்களைப் பற்றி குறிப்பிடும் போது, இந்த சோம்பலைப்பற்றியும் குறிப்பிடுகின்றான். யார் ஒருவர் தொழுகையில் சோம்பலுடன் தொழுகிறாரோ அவரை அல்லாஹ் 'நயவஞ்சகர்கள்' என்று அடையாளம் காட்டுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான், "நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களை வஞ்சித்து விடுவான். தொழுகைக்கு அவர்கள் தயாராகும் பொழுது சோம்பலுடையோராகவே நிற்கிறார்கள் – மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்). இன்னும், மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை"

(அல்குர்ஆன் 4:142)

எனவே, சோம்பல் என்பது நயவஞ்சகத்தின் அடையாளம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அதனால் அதிலிருந்து விடுபட வேண்டும்.

குறிப்பாக சோம்பலைத் தவிர்ப்பதற்காக அதிகாலையில் எழுந்து பஜ்ருடைய தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ஒருவர் சோம்பலில் இருந்து விடுபட்டு, அன்றைய காலைப்பொழுதை சுறுசுறுப்புடன் அடையவேண்டுமா? அதற்கு, நபி (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த வழியை நமக்கு காட்டித் தந்துள்ளார்கள். இருந்தும் இந்த வழிமுறை பின்பற்றப்படாதுள்ளது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் ஒருவர் உறங்கும் போது பிடரியில் ஷைத்தான் மூன்று முடிச்சுகளைப் போடுகிறான். ஒவ்வொரு முடிச்சின் போதும் இரவு இன்னும் இருக்கிறது; உறங்கு என்று கூறுகின்றான். அவர் அதிகாலையில் விழித்து அல்லாஹ்வை நினைவு கூர்ந்தால் ஒரு முடிச்சு அவிழ்கிறது. அவர் உளூச் செய்தால் இன்னொரு முடிச்சு அவிழ்கிறது. அவர் தொழுதால் மூன்றாவது முடிச்சும் அவிழ்கிறது. அவர் மகிழ்வுடனும் மன அமைதியுடனும் காலைப் பொழுதை அடைகிறார். இல்லையெனில் அமைதியற்றவராக, சோம்பல் நிறைந்தவராகக் காலைப் பொழுதை அடைகிறார்'என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

இந்த நபிமொழியின் ஊடாக பஜ்ர் தொழுகைக்கும் சுறுசுறுப்புக்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. சுறுசுறுப்புடன் அன்றைய தினத்தைத் தொடங்குபவர் பஜ்ர் தொழுதவராவார். சோம்பல் நிறைந்தவராக அன்றைய தினத்தை அடைந்தவர் ஷைத்தானோடு சேர்ந்து உறங்கி, பஜ்ர் தொழுகையை தொழாதவர் ஆவார். மேற்கண்ட இரண்டு பிரிவினரில் நாம் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர் என்பதை நம்மை நாமே கேட்டுக்கொள்ள முடியும்.

அதேநேரம் வயிறு புடைக்க சாப்பிடுவதை நிறுத்த வேண்டும். இந்த விஷயத்தில் நாம் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையைக் கடைபிடிக்காததால் சோம்பேறிகளாகக் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். அளவுக்கு மீறி உண்பது நம்மைச் சோம்பேறிகளாக மாற்றிவிடுகின்றது. ஒருவரைப் பார்த்து, ஏன் சோம்பலாக இருக்கிறாய் என்று கேட்கும் போது அவர், 'உண்ட மயக்கம். அது தான் காரணம்' என்று கூறுவதை இன்று சர்வ சாதாரணமாகக் காண முடிகிறது.

ஆனால் நபி (ஸல்) அவர்கள், அரை வயிறு சாப்பிட்டு, கால் வயிறு தண்ணீர் குடித்து, கால் வயிறை காலியாக வைப்பார்கள். அதே போன்று நாமும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றினால் சோம்பலில் இருந்து தவிர்ந்துக் கொள்ளலாம்.

மேலும் இரவில் தாமதமாக உறங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய காலகட்டத்தில் பலர் இரவில் தாமதமாக உறங்கி காலையில் மிகவும் தாமதமாக எழுந்திருக்கக் கூடியவர்களாக உள்ளனர். இதுவும் நபி (ஸல்) அவர்களின் வழக்கத்திற்கு மாறான செயலாகும். நபி (ஸல்) அவர்கள் இரவில் முன்னேரத்தில் உறங்கி, தஹஜ்ஜத் தொழுகைக்காக சீக்கிரம் எழுந்திருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். ஆகையால் நாம் சீக்கிரமாக உறங்கி, அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தை மேற்கொண்டால் சோம்பலில் இருந்து தவிர்ந்துக் கொள்ளலாம்.

அத்தோடு சோம்பலை விட்டும் நம்மை பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம்துஆச்செய்ய வேண்டும். நபி (ஸல்) அவர்கள் தொழுகையில், சோம்பலை விட்டும் பாதுகாவல் தேடுபவர்களாக இருந்தார்கள். 'யா அல்லாஹ்! கவலை, துயரம், இயலாமை, சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம், மனிதனின் ஆதிக்கம் மற்றும் கடனின் சுமை ஆகியவற்றைவிட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்' என்ற துஆவை தொழுகையில் ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள். (ஆதாரம்: புஹாரி)

ஆகையால், ஈருலக வெற்றிக் கனியை நம்மிடமிருந்து பறித்து விடுகின்ற அளவிற்கு மோசமான சோம்பலை நாம் மேற்கண்ட நபிவழி முறைகளை பின்பற்றுவதன் மூலம் விரட்டுவதற்கு முயற்சி செய்ய செய்ய வேண்டும். 'நாளையிலிருந்து நமது முயற்சியைத் துவங்கலாம்' என்று சோம்பலின் காரணமாகத் தள்ளிபோடாமல் அதை இப்பொழுதிலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும்.

சோம்பல் மிக்கவர்கள் வாழ்க்கையில் இழப்பது எத்தனையோ! சுறுசுறுப்பானவர்கள் பெறுவது எவ்வளவோ! எனவே சோம்பலை விரட்டி நாமும் மகிழ்ச்சியாக இருப்பதோடு மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருக்க அல்லாஹ் நமக்கு அருள் புரியட்டும்.

அப்துல்லாஹ்...

# நேரம் ஓர் அமானிதம்

அல்லாஹ்வால் நமக்கு அருளப்பட்டுள்ள அருட்கொடைகளில் (நிஃமத்) நேரம், காலம் மிகவும் உன்னதமானதும் முதன்மையானதுமாகும். மறுமை வாழ்வின் வெற்றி, தோல்வி தீர்மானிக்கப்படுவது நேரத்தினதும், காலத்தினதும் பயன்பாட்டை பொருத்தே ஆகும்.

நேர, காலத்தின் முக்கியத்துவத்தை பற்றி உணர்த்தும் வகையில் அல்லாஹ் சத்தியம் இட்டு அல்குர்ஆனில் பல இடங்களில் குறிப்பிடுகிறான். 'காலத்தின் மீது சத்தியமாக..., விடியற்காலை மீது சத்தியமாக..., காலை மீது சத்தியமாக..., முற்பகல் மீது சத்தியமாக..., பகல் மீது சத்தியமாக.. என அல் குர்ஆன் பல இடங்களில் குறிப்பிட்டிருகின்றது.

நேரம் என்பது ஓர் அமானிதம். அதனை உரிய முறையில் பயன்படுத்துவது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். நாளை மறுமையில் அல்லாஹ் எம்மை விசாரணை செய்யவுள்ளான். இதனை முஹம்மது (ஸல்) அவர்களின் ஹதீஸ் உணர்த்துகின்றது.



'மறுமையில் நான்கு விடயங்களுக்குப் பதிலளிக்காத வரையில் எந்த ஒரு மனிதராலும் நகர முடியாது. உனது வாலிபத்தை எவ்வாறு கழித்தாய்? அறிவை எவ்வாறு பயன்படுத்தினாய்? செல்வத்தை எவ்வாறு சம்பாதித்து, எவ்வாறு செலவழித்தாய்? வாழ்நாளை எவ்வாறு பயன்படுத்தினாய்?'

(ஆதாரம்: திர்மிதி)

இஸ்லாத்தின் அடிப்படை இபாதத்கள் நேரத்துடன் தொடர்புற்றிருப்பது இதன் முக்கியத்துவத்தை மேலும் உணர்த்துகின்றது. நபி (ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து 'அல்லாஹ்வின் தூதரே..., நற்செயல்களில் இறைவன் அதிகம் விரும்புவது எது?' என வினவ, நபி (ஸல்) அவர்கள் அதற்கு ' தொழுகையை ஆரம்ப நேரத்தில் தொழுவதாகும்.' என்று பதிலளித்தார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

வாழ்வில் வெற்றி பெற வேண்டுமாயின் நேரத்தினை முகாமை செய்ய வேண்டியது அவசியமாகும். இதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு வலியுறுத்தினார்கள்.

'ஐந்து விடயங்கள் நிகழ முன்னர், ஐந்து விடயங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மரணத்திற்கு முன்னர் வாழ்வு, நோய்க்கு முன்னர் ஆரோக்கியம், வேலைப்பளுவுக்கு முன்னர் ஓய்வு, முதுமைக்கு முன்னர் இளமை, வறுமைக்கு முன்னர் செல்வம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

(ஆதாரம்: ஹாகிம்)

'அல்லாஹ் வழங்கிய இரண்டு நிஃமத்துக்கள் குறித்து அதிகமானவர்கள் மிகவும் கவனயீனமாக இருக்கிறார்கள். அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்.' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

அந்த வகையில் நேரத்தை உரிய முறையில் பயன்படுத்திச் சாதனை புரிந்தவர்களை வரலாறு நெடுகிலும் காணலாம். கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் தனது இரண்டு வருட குறுகிய ஆட்சிக் காலத்தில் பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தினார்கள். அல் குர்ஆனை ஒன்று திரட்டுதல், போலி நபிமார்களின் சதியை முறியடித்தல், இஸ்லாமிய ஆட்சியை பலப்படுத்தல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களது ஆட்சிக் காலம் சுமார் இரண்டு வருடங்களாகும். ஹதீஸ்களை ஒன்று திரட்டுவதற்கான பணியை ஆரம்பித்தமை, ஸகாத் மூலம் வறுமையற்ற செல்வச் செழிப்புமிக்க நாடாக இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை மாற்றியமைத்தமை போன்றன குறுகிய காலத்தில் அவர் செய்த முக்கிய சில சாதனைகளாகும்.

நாற்பது வயதில் மரணித்த இமாம் நவவி (ரஹ்) அவர்கள் 500க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். இவ்வாறான சாதனைகளுக்கு காரணம் அவர்கள் நேரத்தை உரிய முறையில் திட்டமிட்டுப் பயன்படுத்தியமையே ஆகும்.

வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் பெறுமதி வாய்ந்தவை. அதனை உதாசீனம் செய்வது மடமையாகும். காலம், நேரம் உருண்டோடிக் கொண்டே செல்கின்றது. அதனைப் பயன்படுத்திக் கொள்வது எமது கடமை. காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்பர். எமது வாழ்வில் எமது வயது கூடிக் கொண்டு செல்லும் போது எமக்கு மரணம் நெருங்குகின்றது என்பதை உணர்ந்து, மறுமை வாழ்வுக்காக தயாராக வேண்டும்.

நேரத்தை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடைவதற்கு, நேரம் பற்றி மறுமையில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவோம் என்பதை உணர்ந்து, தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றல், திலாவதுல் குர்ஆன், திக்ர், ஸலவாத்து, காலை மாலை அவ்ராதுகள் போன்றவற்றை தொடராக ஓதி வருதல், அன்றாடம் நிறைவேற்ற வேண்டிய செயல்களை திட்டமிடல், கற்றல் நடவடிக்கைகளை தினமும் திட்டமிட்டு நிறைவேற்றல், ஓய்வு நேரங்களை பயனுள்ள வழிகளில் கழித்தல் போன்றவற்றை கடைபிடித்தல் அவசியம்.

நேரத்தை உரிய முறையில் பயன்படுத்த இளம் வயதிலிருந்தே பழகிக் கொள்ள வேண்டும். உரிய நேரத்தில் உரிய வேலையை செய்து நேர முகாமைத்துவத்தைப் பேணி வாழ்வை வடிவமைப்பது இம்மை, மறுமை வெற்றிக்கு துணை புரியும். நேரம் வாள் போன்றது. நீ அதனை உரிய முறையில் பயன்படுத்தாவிட்டால் அது உன்னை வெட்டிவிடும். இந்தக் கூற்றுக்கமைய வாழப் பழகிக் கொள்வோம்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(பாரி, (அல் அஸ்ஹரி)), வெலிகம.

# நகர்வலம்



## மாத்தறை மாவட்ட இணைப்புக் குழுக்கூட்டம்; முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வு





**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் இணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க ஆகியோரின் தலைமையில் (21) இடம் பெற்றது.

2024 மாத்தறை மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி இதன் போது விரிவாக ஆராயப்பட்டன. மேலும் கடந்த இணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட படி, மாத்தறை மாவட்டத்தினுள் போதைப் பொருள் பாவனையை தடுக்கும் முயற்சிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் சுகாதார சேவைகள் போன்றன எந்த அளவு மேற் கொள்ளப்பட்டன பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

இதில் மாவட்ட மக்கள் பிரதிநிதிகள், தென் மாகாண பிரதம செயலாளர் சட்டத்தரணி சுமித் அலககோன், மாத்தறை மாவட்ட செயலாளர் கனேஷ அமரசிங்க மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (23) அலரி மாளிகையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த வீரசிங்க, யதாமினி குணவர்தன, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன, பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சிங்கப்பூர் ஸ்ரீலங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய கலாநிதி கரதிதெடியன குணரத்ன தேரரின் நன்கொடையுடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மறைந்த ஈரான் ஜனாதிபதிக்கு அனுதாபம்



அண்மையில் மறைந்த ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி, ஈரான் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஹுசைன் அமீர் அப்துல் லாஹியான் உள்ளிட்ட எட்டு அரச அதிகாரிகளுக்கும் , வணிக உலக சர்வதேச அமைப்பின் இயக்குநர் ரகு இந்திரகுமார் கொழும்பிலுள்ள ஈரான் தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள விசேட நினைவுக்குறிப்பேட்டில் அனுதாபச் செய்தியை பதிவிட்டார்.

ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட பலரின் திடீர் உயிரிழப்பு தொடர்பில் நாம் மிகுந்த மன வேதனையடைந்துள்ளோம் என்றும், விசேடமாக இலங்கைக்கும் எம்மோடு தொடர்புடைய பிராந்தியத்துக்கும் அவர்களின் இழப்பு பாரிய இழப்பாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஈரானும் இலங்கையும் நெடுங்காலமாக நட்போடு பணியாற்றி வருகின்றன. இலங்கையின் அபிவிருத்திக்கு ஈரான் பல ஒத்துழைப்புகளை நல்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொது நிதி முகாமைத்துவ சட்டமூலம்:

## சுதந்திர இலங்கையில் 78 வருடங்களில் அரசாங்கம் மேற்கொண்ட முக்கிய தீர்மானம்

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொது நிதி முகாமைத்துவ சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளமை வரலாற்றுச் சாதனை என்றும் இது சுதந்திர இலங்கையின் 76 வருடங்களில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள மிக முக்கியமான தீர்மானம் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினால் பொருளாதாரம், சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர்,



சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் இலங்கையிடம் இரண்டு தசாப்தங்களாக விடுத்த கோரிக்கையை நிறைவேற்றுவதாக இதனை குறிப்பிட முடியும்.

திறைசேரியின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இந்த வரைபில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. திறைசேரியின் செயலாளர் மற்றும் பிரதம கணக்காய்வு அதிகாரியின் அதிகாரங்கள் சரியாக வரையறுக்கப்படாதது நெருக்கடிக்கு வழிவகுத்தது.

இதற்கு மேலதிகமாக, இந்த சட்டத்தின் ஊடாக சொத்துக்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் உரிமையும் மக்களுக்கு வழங்கப்படுகிறது. எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு அமைவாக இந்த நாட்டில் முறையான நிதி முகாமைத்துவத்தை உருவாக்குவதற்கு வேறு அரசாங்கங்கள் நியமிக்கப்பட வேண்டிய அவசியமில்லை .

அதேவேளை, சீனி வரி மோசடியினால் இழந்த வரி வருமானத்தில் சுமார் 500 மில்லியன் ரூபாவை வருமான வரியாக அறவிட முடிந்துள்ளது.

## கொழும்பு நகர எல்லையில் அனர்த்தத்தை ஏற்படுத்தும் 100 மரங்கள் அகற்றல்

கொழும்பு நகர எல்லையில் அனர்த்தங்களை ஏற்படுத்தக்கூடிய சுமார் 200 மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாறு காணப்பட்ட 100 மரங்கள் இதுவரை அகற்றப்பட்டுள்ளதாக மாநகர சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 20 மற்றும் 21ஆம் திகதிகளில் கொழும்பு நகர எல்லையில் சுமார் 20 மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மரங்கள் முறிந்து விழும் நிலை காணப்படுவதால் பொது மக்கள் இது தொடர்பில் அவதானமாக செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை நகர் ஊடாக வீசிய பலத்த காற்றினால் களுத்துறை பாலத்திற்கு அருகில் உள்ள மரமொன்று நேற்று (23) முறிந்து வீழ்ந்துள்ளது. இதனால் காலியில் இருந்து கொழும்புக்கான பிரதான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

வீதியை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுத்தமான குடிநீரை மாத்திரம் பருகுமாறு கோரிக்கை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள குளங்கள் நிறைந்து வடிவதனால் வெசாக் போயா தினத்தில் இங்கு வருகை தந்துள்ள வெளி மாவட்டத்தினர் சுத்தமான குடிநீரை மாத்திரம் பாவிக்குமாறு மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெசாக் போயாவை முன்னிட்டு அநுராதபுரம் வந்துள்ளவர்கள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு செயல்படுமாறு மாநகர ஆணையாளர் ருவன் விஜேசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆசிரியர் தாக்கி மாணவி காயம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

ஆசிரியரின் தாக்குதல் காரணமாக காயத்துக்குள்ளான பாடசாலை மாணவி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஒன்று பொலன்னறுவைப் பகுதி பாடசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 10 ல் கல்வி கற்கும் மாணவி ஒருவரே இவ்வாறு ஆசிரியரின் தாக்குதலுக்குட்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கு






பேருவளை, சீனன்கோட்டை 'நௌபர் ஏசியன் டிரவல்ஸ்' சார்பில் இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற புனித மக்கமா நகர் செல்லவுள்ள ஹாஜிகளுக்கான ஹஜ் கடமைகள் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று (23) பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

'நௌபர் ஏசியன் டிரவல்ஸ்' ஏற்பாட்டாளர் நௌபர் ஹாஜி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெலிகம பாரி அரபுக்கல்லூரி அதிபரும் மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவருமான அல்ஹாபிழ் அப்துல் ரஹ்மான் (மழாஹிரி) மற்றும் மௌலவி மஜீத் ஆகியோர் ஹஜ் கடமைகள் தொடர்பாக ஹாஜிகளுக்கு விளக்கங்களை வழங்கினர். இதில் கலந்துகொண்டோரில்ஒருபகுதியினரைபடங்களில் காணலாம்.

## பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பள்ளிவாசலில் 133 ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம்

'ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்திபெற்ற சீனன்கோட்டை பாஸிய்யா பெரியபள்ளிவாசலில் 133ஆவது வருட சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம் நாளை சனிக்கிழமை மாலை கலீபத்துஷ் சாதுலிகளான அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) மௌலவி எம்.ஐ.எம். றபீக் (பஹ்ஜி), எம்.எம் ஸைனுல்ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

கலீபதுல் குலபா மௌலவி அல் உஸ்தாத் எம். இஸட். முஹம்மத் ஸுஹூர் (பாரி) கலீபதுஷ் ஷாதுலி, மௌலவி அஸ் ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்ஸி) ஆகியோர் விஷேட சொற்பொழிவு நிகழ்த்துவர்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் பேரர் அஷ் ஷெய்கு நூறுத்தீன் அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம் (றழி) வடஆபிரிக்காவில் கிமாரா என்ற ஊரில் ஹிஜ்ரி 593 ஷவ்வால் அல்லது துல்கஹ்தா மாதம் கி.பி 1197 இல் பிறந்தார்.



சிறு வயதிலேயே கல்வியில் கவனம் செலுத்தி திருக்குர்ஆனை திறம் பட மனனம் செய்து தீனியத்தான கல்வியில் சிறந்து விளங்கிய அன்னார் தூனிஸ் நகரம் சென்று மார்க்க ஞானம் பெற்றார். சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று ஞானத்திலகமாக திகழ்ந்தார்.

பல ஊர்களுக்கும் சென்று ஷாதுலிய்யா தரீக்கா என்ற ஞான வழியை அமைத்து அதன் மூலம் மக்களை ஞானவான்களாக மாற்றினார். ஷெய்காகச் செயலாற்றிய பின்பு குத்புல் அக்பராக உயர்ந்தார்.

ஷாதுலி நாயகம் பல ஹஜ்ஜுகள் செய்துள்ளார். கடைசியாக தங்கள் குடும்பத்தாருடனும் சீடர்களுடனும் ஹஜ் செய்யப்புறப்பட்டார். ஹஜ்ஜுக்குப் புறப்பட்டு ஈஜாப் பாலைவனத்திலுள்ள ஹுமைஸரா என்ற இடத்தை வந்தடைந்தார். அந்த அருமைச் சீடர் அபுல் அப்பாஸ் அஹ்மதுல் முர்ஸி (றழி) அவர்களை அருகில் அமரச் செய்து அரிய அறிவுரைகளை அளித்துவிட்டு அனைவரையும் அழைத்து தங்கள் கலீபாவாக அவரை நியமித்து அனைத்து அதிகாரங்களையும் அளித்துள்ளதாகவும் அறிவித்தார்.

பின்னர் அன்று இரவு முழுதும் அல்லாஹ்வை தியானிப்பதிலேயே ஈடுபட்டார். அப்படியே அவரது ஆத்மா அல்லாஹ் அளவில் அமைதி அடைந்தது.

ஷாதுலி நாயகம் அவர்களின் காலத்துக்குப் பின் இஸ்லாமிய உலகில் தோன்றிய பேறிஞர்கள் பெரும்பாலானோர் புனித ஷாதுலிய்யா தரீக்கா வழி நடந்தவர்களே என்பதற்கு சரித்திரம் சான்று பகர்கின்றது.

**(பேருவளை பீ.எம் முக்தார்)**

## மாத்தறை மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 79 குடும்பங்கள் பாதிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

மாத்தறை மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் மேலும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் வரை (22) 79 குடும்பங்களைச் சேர்ந்த 304 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 79 வீடுகள் பாதியளவில் சேதமடைந்துள்ளதாக மாத்தறை மாவட்ட செயலாளர் கனேஷ அமரசிங்க தெரிவித்தார். அக்குரஸ்ஸ பிரதேச செயலக பிரிவில் 9 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 9 வீடுகள் பாதியளவில் சேதமடைந்துள்ளன. திஹகொடவில் 7 குடும்பங்களும் 7 வீடுகளும் சேதமடைந்துள்ளன.

தெவிநுவர பிரதேச செயலக பிரிவில் 5 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகள் சேதமடைந்துள்ளன. வெலிகம பிரதேச செயலக பிரிவில் 4 குடும்பங்களும் 4 வீடுகளும் சேதமடைந்துள்ளன. கம்புறுப்பிட்டிய, கிருந்தை புகுல்வல், அது ரெலிய, பஸ்கொட, ஹக்மன மாத்தறை கடவத்ஸர, பிடபத்தரமுலட்டியன, கொட பொல, திக்குவல்லை, வெலிப்பிட்டிய ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல வீடுகள் பாதியளவில் சேதமடைந்துள்ளன.

## சீன ஆய்வுகளுக்கான அமைப்பு உதயம்

சீன ஆய்வுகளுக்காக இலங்கை அறிஞர்கள் பலரின் பங்கேற்புடன் 'The Council of Sinologists of Sri lanka' என்னும் பெயரில் அமைப்பொன்றை நிறுவுவதற்கான கலந்துரையாடலொன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. சீனாவிலுள்ள World Sinologists Center ஆதரவின் கீழ் இது செயல்படுத்தப் படவுள்ளது.

பீஜிங் மொழி மற்றும் கலாசார பல்கலைக்கழகத்தின் (CBLCU) கீழ் ஜூலை 20, 2022 ஆம் ஆண்டு World Council of Sinologists பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. அந்த ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் திகதி , அதன் நிர்வாகக் பிரிவான , World Sinologists Center , சீனாவின் (Chigdao) சிக்டாவோவில் நிறுவப்பட்டது.

ஆரம்பத்தில், சீனாவின் ஆய்வு மற்றும் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ள 61 நாடுகளைச் சேர்ந்த 105 பேர் ஒன்றிணைக்கப்பட்டனர்.

கவுன்சிலின் வழிகாட்டுதலின் கீழ், The Council of Sinology Centre ஐந்து துறைகளினூடாக செயல்படுகின்றது. அறிவுசார் மத்திய நிலையம் மொழிபெயர்ப்பு மத்திய நிலையம், எழுத்து மத்திய நிலையம், ஆய்வு மத்திய நிலையம் மற்றும் மாநாட்டு மத்திய நிலையம் ஆகியன அவையாகும். எதிர்காலத்தில், இலங்கையில் சீன ஆய்வுகள் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் பல்வேறு அறிஞர்களின் இணைப்பின் மூலம் மேம்பட்ட துறைகளின் கீழ் செயல்பாடுகளை விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் ஆர்வமுள்ளவர்கள் பின் வரும் sinologycouncilsrilanka@gmail.com இணைய தள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

## பெயர் மாற்றம்

இல 74, ஜாமியுள்ளாபிரீன் வீதி, காத்தான்குடி 06 எனும் பகுதியைச் சேர்ந்த தயாபரன் தர்ஷிக்கா (தே.அ.அ.இல. 200482200938) ஆகிய நான் எனது சுயவிருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மதத்தினை ஏற்றுக் கொண்டு எனது பெயரை தயாபரன் ஸைனப் என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசிற்கு அறிவிக்கின்றேன்.




## சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

### கடுவளை மாவட்ட நீதிமன்றத்தில்

1. இசுரு உத்பல அபேவர்தன, இல - 18, சரசவி பூங்கா, நாவல வீதி, நுகேகொடை
2. விஜேமுனி சுமித் நந்தன சொய்சா, இல.508/27 மஹகெதர மில்லகஹவத்த, களம்பெல்ல வீதி, கொஸ்கம

**முறைப்பாட்டாளர்கள்**

வழக்கு இலக்கம் : SPL726/2024
தன்மை : விசேடம்
செயற்பாடு : பொது
பெறுமதி : ரூ.30,000,000/-

**எதிராக**

1. திரு. மைத்திரிபால சிரிசேன 19C ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்த கொழும்பு - 07
2. திரு. சாரதி துஷ்மந்த மித்ரபால 528, கரவனெல்ல ருவன்வெல்ல
3. ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி திரு. விஜேதாஸ ராஜபக்ஷ இல.17 விஜயபா மாவத்த, நாவல வீதி, நுகெகொடை
4. நிமல் சிரிபால டி சில்வா 93/20 எல்விட்டிகல மாவத்த, கொழும்பு - 08
5. திலங்க சுமதிபால இல.02 கலாநிதி மிலீனா சுமதியால மாவத்த, கொழும்பு - 10
6. லசந்த அலகியவன்ன மீவிட்டிகம்மன, ஊராபொல
7. துமிந்த திஸாநாயக்க 56, ஸ்கெல்டன் வீதி, கொழும்பு - 05
8. மஹிந்த அமரவீர B63, மஹகமசேக்கர மாவத்த, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு - 07
9. வீரகுமார திஸாநாயக்க இல. 105/3, வத்தல்பொல வீதி, வலான பாணந்துறை
10. பைசர் முஸ்தபா, இல.10, "என்க்லேவ்" லேக் டிரைவ் ராஜகிரிய
11. பேராசிரியர் திரு. ரோஹன லக்ஷ்மன் பியதாஸ இல.37, முதலாம் ஒழுங்கை, அடுப்பொல, கண்டி,
12. திரு ஹெக்டர் பெத்மகே இல.629, தலங்கம தெற்கு பத்தரமுல்ல
13. சட்டத்தரணி திரு. கீர்த்தி உடவத்த இல.30, கிறீன் லேன்ட் அவெனியூ நெதிமால, தெஹிவளை
14. கலாநிதி சமில லியனகே இல.275, கலஹேகட, நவன்துடுவ, மத்துகம,
15. திரு. கே.பீ.குனவர்த்தன, வாடி வீடு வீதி, மஹியங்கனை
16. திரு.சசின் வாஸ் குணவர்தன இல.2/1, ரத்னாயக்க மாவத்த, பெலவத்த
17. திரு. சரத் ஏக்கநாயக்க 35, கடவத்த வீதி, களுபோவில
18. திரு. மெத்சிரி டி சில்வா இல.184, கனம்பிட்டிய வீதி, காலி
19. திரு. இந்திக்க ராஜபக்ஷ 58C, மாத்தலான, நிட்டம்புவ
20. திரு. லக்மால் விக்ரமாரச்சி இல. 881, பிங்கிரிய

இவ்வழக்கு சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சகல அங்கத்தவர்களும் அறிந்து கொள்ளும் முகமாக 2024 மே 13ம் திகதி அல்லது அதற்குக் கிட்டிய நாளில் அல்லது மேற்படி பெயர் குறிப்பிடப்படும் முறைப்பாட்டாளர்களால் கடுவளை மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி பெயர், குறிப்பிடப்படும் 1 முதல் 20 வரையான முறைப்பாட்டாளர்களுக்கு எதிராக மேற்படி இல. கொண்ட வழக்கு தொடுக்கப்பட்டு, ஏனைய விடயங்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் கோரப்பட்டுள்ளதால்

(அ) சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16ம் பிரிவின் பிரகாரம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சி சார்பாக 13ம் முறைப்பாட்டாளர்களுக்கு எதிராக இவ் வழக்கை தாக்கல் செய்து நடத்திச் செல்வதற்கு முறைப்பாட்டாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுமாறும் மற்றும் இவ் வழக்கு சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்களுக்கு இவ் வழக்கில் தோன்றி பிரதிவாதியின் கருத்தை சமர்ப்பிப்பதற்காக பொருத்தமான மொழி மூலம் ஊடாக அறிவித்தல் வழங்குவதற்காக கட்டளையொன்று பிறப்பிக்கப்படுமாறும்,

(ஆ) மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 3ம் பிரதிவாதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக யாப்பினூடாக மற்றும் சட்ட ரீதியான நியமிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற கட்டளையை வழங்குமாறும்.

(இ) மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 3ம் பிரதிவாதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான உங்களுக்கு நீதிமன்ற கட்டளையை வழங்குமாறும்

(ஈ) மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 13ம் பிரதிவாதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பிரதம செயலாளராக யாப்பின் பிரகாரம் சட்டரீதியாக நியமிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்ற கட்டளையை விநியோகிக்குமாறும்,

(உ) மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 13ஆம் பிரதிவாதி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பிரதம செயலாளராக நீதிமன்ற கட்டளையை பிறப்பிக்குமாறும்

(ஊ) 2024.05.12ம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்படுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் உட்பட மேற்படி பெயர் கொண்ட 1 முதல் 20 வரையான பிரதிவாதிகளுக்கு உரித்துரிமை இல்லையென நீதிமன்றத்தினால் கட்டளை பிறப்பிக்குமாறு,

(எ) 2024.05.12ம் திகதி நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக 3ம் பிரதிவாதியான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ வை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் உட்பட மேற்படி பெயர் குறிப்பிடப்படும் - 4முதல் 10 வரையான பிரதிவாதிகளுக்கு உரித்துரிமை இல்லையென தெரிவிக்குமாறும்,

(ஏ) 2024.05.12ம் திகதி நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படுவதற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் உட்பட மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 1 முதல் 20 வரையான பிரதிவாதிகளுக்கு அவர்களால் மற்றும் அவர்களின் கீழ் செயற்படும் அந்த பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தடுக்குமாறு நிரந்தர இன்ஜன்சன் தடைக்கட்டளையொன்று விநியோகிக்குமாறும்

(ஒ) 2024.05.12ம் திககி நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை கூட்டத்திலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக 3ம் பிரதிவாதியான கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ வை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படுதல் மற்றும் அல்லது நிராகரிப்பதன் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சகல அங்கத்தவர்கள் மற்றும் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 4 முதல் 10 வரையான பிரதிவாதிகளுக்கு அவர்களால் மற்றும் அவர்களின் கீழ் செயற்படும் அப்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தவிர்க்குமாறு நிரந்தர இன்ஜெக்சன் கடைக் கட்டளை பிறப்பிக்குமாறும்,

(ஓ) 2024.05.12ம் திகதி நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்படுவதற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர் உட்பட மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 1 முதல் 20 வரையான பிரதிவாதிகளும் அவர்கள் மூலம் மற்றும் அவர்களின் கீழ் செயற்படும் அவ்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தவிர்ந்து கொள்ளுமாறு அவர்களுக்கு எதிராக இவ் வழக்கு முடிவடையும் வரை செல்லுபடியாகுமாறு இடைக்கால இன்ஜெக்ஷன் தடையுத்தரவை வழங்குமாறும்,

(ஔ) 2024.05.12ம் திகதி நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் நிலைவேற்றுச்சபை கூட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக 3ஆம் பிரதிவாதி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படுவதற்கும் மற்றும் (அல்லது நிராகரிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சகல அங்கத்தவர்கள் மற்றும் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 4 முதல் 10 வரையான பிரதிவாதிகளும் அவர்களால் மற்றும் அவர்களின் கீழ் செயற்படும் அவ்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தவிர்த்து கொள்ளுமாறு அவர்களுக்கு எதிராக இவ் வழக்கு முடிவடையும் வரை செல்லுபடியாகுமாறு இடைக்கால இன்ஜெக்சன் தடைக் கட்டளையை பிறப்பிக்குமாறும் மற்றும் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 4 முதல் 10 வரையான பிரதிவாதிகளும் அவர்களால் மற்றும் அவரின் கீழ் செயற்படும் அப்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தவிர்க்குமாறு அவர்கள் எதிராக இவ் வழக்கு விசாரித்து முடியும் வரை செல்லுபடியாகுமாறு இடைக்கால இன்ஜெக்சன் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும்,

(க) 2024.05.12ம் திகதி நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்று சபை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு மாற்றமாக செயற்படுவதன் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்தவர்கள் உட்பட மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 1 முதல் 20 வரையான பிரதிவாதிகளுக்கும் அவர்களால் மற்றும் அவரின் கீழ் செயற்படும் அப்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலருக்கும் தவிர்க்கும் விதத்தில் அவர்களுக்கு எதிராக இடைக்கால இன்ஜெக்சன் தடையுத்தரவு பிறப்பிக்குமாறும் செல்லுபடியாகுமாறு மேற்படி வேலைகளுக்காக ஆரம்ப வேளையிலேயே தடையுத்தரவை பிறப்பிக்குமாறும்,

(கா) 2024.05.12ம் திகதி நடத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக 3ம் பிரதிவாதி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு மாற்றமாக செயற்படுவதற்கும் மற்றும் அல்லது நிராகரிப்பதற்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சகல அங்கத்தவர்கள் மற்றும் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் 4 முதல் 10 வரையான பிரதிவாதிகளுக்கு அவர் மூலம் மற்றும் அவரின் கீழ் செயற்படும் அவ்பிரதிவாதிகளின் ஊழியர் பிரதிநிதிகள் சகலரும் தவிர்த்து கொள்ளுமாறு அவர்களுக்கு எதிராக இடைக்கால இன்ஜென்சன் தடைக்கட்டளையை பிறப்பிக்கும் வரை செல்லுபடியாகுமாறு மேற்படி வேலைகளுக்காக ஆரம்ப வேளையிலேயே தடைக் கட்டளையை விநியோகிக்குமாறும்

(கி) வழக்கு கட்டணங்கள் மற்றும்

(கீ) நீதிமன்றம் கருதும் மேலும் மற்றும் மேலதிக சலுகைகளை வழங்குமாறும் ஆகும்.

அதன் காரணமாக இவ்வழக்கு 2024. மே 27ம் திகதி நோட்டிஸ் மற்றும் "சம்மன்" அறிக்கைகளுக்காக கடுவளை மாவட்ட நீதிமன்றத்தில் மு.ப. 9.00 இற்கு கோரப்படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம், கடுவளை**

**2024 மே 21ஆம் திகதியில்**
**தயாரித்தது**
**முறைப்பாட்டாளர்களின் சட்டத்தரணி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## வடமேல் மாகாண சபை
## சமூக சேவைகள் திணைக்களம்

1. அட்டவணையில் தரப்பட்டுள்ள வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை குருநாகல், சமூக சேவைகள் திணைக்களம், பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையாக, சித்திகரமான விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாதிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் CIDA பதிவுத் தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் தளம், "E" கட்டிடம், சமூக சேவைகள் திணைக்களம், பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

   தொலைபேசி இல. 037-2223484, 037-2224970 தொலைநகல் இல. 037-2224976
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின், 2024 ஜூன் 14ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் தளம், "E" கட்டிடம், சமூக சேவைகள் திணைக்களம், பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
5. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சமூக சேவைகள் திணைக்களம், "E" கட்டிடம், 2ஆம் தளம், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, குருநாகல் எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் தளம், "E" கட்டிடம், கணக்கிடல் கிளையில் வைக்கப்பட்டுள்ளது. சமுகம் தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஜூன் 03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு குருநாகல், மாகாண சபை அலுவலகக் கட்டிடத்தொகுதி, 2ஆம் தளம், "E" கட்டிடம், சமூக சேவைகள் திணைக்களத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.
7. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைக்கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இப்பெறுகையின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதனால் 04/2016 (ii)ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளதற்கமைய பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பிரயோகிக்கப்படும்.
8. விலைமனுதாரர்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க 2.2 உப வாசகத்தின் கீழான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட மதிப்பீட்டுக் கிரயத்திற்கு)

| விலைக் கோரல் குறியீட்டு இலக்கம் | ஒப்பந்தத்தின் தலைப்பு | பிரிவு | தேவையான CIDA தரம் (கட்டிடங்கள்) | விலைக் கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/01/2024** | வறக்காவெஹெர முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | ரிதீகம | **C8-C7** | **33,000.00** | **1,500.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/02/2024** | கிரிபாவ முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் அத்தியாவசிய வசதிகளை அபிவிருத்தி செய்தல் | மாஹோ | **C8-C7** | **26,000.00** | **1,250.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/03/2024** | முந்தல் முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் உட்கட்டமைப்பின் அத்தியாவசிய திருத்தவேலைகள் | புத்தளம் | **C8-C7** | **21,000.00** | **1,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/04/2024** | மொஹொட்டிமுல்ல, சஹன பியச, முன் கல்வி மற்றும் தொழிற்கல்வி நிலையத்தின் அபிவிருத்தி வசதிகளை பராமரித்தல் | வென்னப்புவ | **C8-C7** | **32,000.00** | **1,500.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/05/2024** | நிகவெரட்டிய முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் கட்டிடத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் அணுகல் வீதிகளை மேம்படுத்துதல் | வாரியபொல | **C9-C8** | **11,000.00** | **1,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/06/2024** | பிங்கிரிய முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி வசதிகளை புதுப்பித்தல். | குளியாப்பிட்டிய | **C9-C8** | **15,000.00** | **1,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/07/2024** | கருவலகஸ்வெவ முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள் | புத்தளம் | **C8-C7** | **34,000.00** | **1,500.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/08/2024** | ஆனமடுவ முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள் | புத்தளம் | **C8-C7** | **37,000.00** | **1,750.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/09/2024** | கல்கமுவ, முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் சேவை வசதிகளை மீள் அபிவிருத்தி செய்தல் | மாஹோ | **C9-C8** | **20,000.00** | **1,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/10/2024** | அம்பன்பொல முன் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடத்தை புதுப்பித்தல் | மாஹோ | **C8-C7** | **22,000.00** | **1,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/11/2024** | பொல்கஹவெல முன் கல்வி மற்றும் தொழிற் கல்வி நிலையத்தின் வசதிகள் மற்றும் கட்டிடத்தின் திருத்தவேலைகள் | குருநாகல் | **C7-C6** | **59,000.00** | **2,500.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ PS/12/2024** | யக்கபிட்டிய முன் கல்வி மற்றும் தொழிற் கல்வி பயிற்சி நிலையத்தின் அபிவிருத்தி மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | குருநாகல் | **C8-C7** | **24,000.00** | **1,250.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ EH/01/2024** | மாஹோ மீமுத்த முதியோர் இல்லத்தின் புதுப்பித்தல் வேலைகள் | மாஹோ | **C8-C7** | **49,000.00** | **2,000.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ EH/02/2024** | ரிதீகம, அசரணசரண முதியோர் இல்லத்தின் அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகள் மற்றும் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | ரிதீகம | **C8-C7** | **26,000.00** | **1,250.00** |
| **NWP/SSD/ ACC02/ REN:/ EH/03/2024** | கல்கமுவ, மாகலனேகம, அசரணசரண முதியோர் இல்லத்தின் அத்தியாவசிய அபிவிருத்தி வேலைகள் மற்றும் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | மாஹோ | **C8-C7** | **33,000.00** | **1,500.00** |
| **NWP/SSD/ ACC02/ PSDG/ DC/02/2024** | தங்கொட்டுவ, மொஹொட்டிமுல்ல முன் கல்வி மற்றும் தொழிற் கல்வி நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | வென்னப்புவ | **C7-C6** | **63,000.00** | **2,500.00** |
| **NWP/SSD/ ACC02/ PSDG/ EH/01/2024** | கல்கமுவயில், அசரணசரண முதியோர் இல்லத்தில் பெண் முதியோருக்கு பெண்கள் விடுதிக் கட்டிடத்தை நிர்மாணித்தல். (கட்டம் 2 மிகுதி வேலைகள்) | மாஹோ | **C7-C6** | **52,000.00** | **2,500.00** |



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளீர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

**I. பின்வரும் பந்தியை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடைகளை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

மழைக் காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்தது போலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காண முடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே அசைந்து அசைந்து செல்வதைக் காணலாம்.

01. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. ……………………………

02. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக. ……………………………

03. ஆடி அசைந்து என்பதாற் கருதப்படுவது யாது? ……………………………

04. அ.ஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக. ……………………


05. ஆரவாரம் என்பதாற் கருதப்படுவது யாது? ……………………………

06. பந்தியில் வந்துள்ள உவமைத் தொடரை எழுதுக. ……………………………

07. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துப் புதிரைப் பூரணப்படுத்துக.

**இடமிருந்து வலம்**
1. நட்டம் என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்
2. திருடி என்ற சொல்லின் ஆண்பால் சொல்

**மேலிருந்து கீழ்**
1. முடிவு என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்
3. ………… பதவி இவ் இணைமொழியை பூரணப்படுத்த பொருத்தமான சொல்



08. பொருத்தமான விடையை எழுதுங்கள்.
i. விமானத்திற்கு விமானி போன்று கப்பலுக்கு ……………………………
ii. ஆசிரியருக்கு மாணவன் வைத்தியருக்கு ……………………………

09. அடைப்பினுள் இருக்கும் சொற்களைக் கொண்டு பொருத்தமான பயனிலைச் சொற்களை இடைவெளியில் எழுதுக.
i. நாளை கடும் மழை (பெய்) ……………………………
ii. என் தம்பி நாளை (வரு) ……………………………

**II.**

10. கீழேயுள்ள வாக்கியங்களுக்கு அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைத் தெரிந்து கோடிடுக.
i. பாம்மைக் கண்ட சிறுவன் ……………… (அலரி / அலறி)க் கொண்டு ஓடினான்.
ii. காலையும், மாலையும் …………… (இரைவனை / இறைவனை) வணங்கினாள்.
iii. கப்பல்கள் ……………………. (பறவைகளில், பரவையில்) பயணம் செல்லும்.

11. ஒருமை வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.
i. கோழி முட்டை இட்டது ……………………………
ii. மான் வேகமாக ஓடியது ……………………………

12. எதிர்பாற் சொற்களை எழுதுக.
i. வீரன் - ……………………… ii. சீமான் - ………………………
iii. வேடுவன் - ………………………

13. பொருத்தமான இரட்டைக் கிளவிச் சொல்லை எழுதுக.
i. நெருப்பில் இட்ட தங்கம் ………………………… என மின்னியது.
ii. பயத்தினால் இதயம் ………………………… என அடித்தது.
iii. சமையல் வாசனை …………………… என மூக்கைத் துளைத்தது.

14. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| i. வண்ணம் | ஈகை |
| ii. செய்தித்தாள் | ஏர் |
| iii. கொடை | வலிமை |
| iv. மாற்றான் | அழகு |
| v. கலப்பை | நாளிதழ் |
| vi. உரம் | பகைவன் |

15. நிகழ்கால பன்மை சொற்களை ஒருமை சொற்களாக மாற்றி எழுதுக.
i. பேருந்துகள் வீதியில் வேகமாகச் செல்கின்றன.
……………………………………………………
ii. நாங்கள் பாடசாலைக்குச் செல்கிறோம்.
……………………………………………………
iii. அவர்கள் விரைவாக குளிக்கின்றனர்.
……………………………………………………

**III.** ஆண்பாற் சொற்களிற்கு பதிலாக பெண்பாற் சொற்களை வைத்து வாக்கியங்களை மீண்டும் எழுதுக.

16. எனது எசமான் நல்லவர் - ……………………………


17. எனது தம்பி ஓவியம் வரைவான் - ……………………………

18. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.
i. கடுகு ……………………… காரம் பெரிது
ii. ஆற்றிலே போட்டாலும் ……………………… போடு

19. பின்வரும் ஆங்கில வாக்கியத்தை ஒழுங்குபடுத்தி எழுதுக.
i. brother / one / I / have ……………………………
ii. This / home / my / is ……………………………


20. பின்வரும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்க் கருத்தை எழுதுக.
i. சுதுபாட்ட - ……………………… ii. எலுவா - ………………………

21. கீழ்வரும் அளவிடையைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.




i. கொழும்பிலிருந்து சிலாபத்திற்கு உள்ள தூரம் யாது? ……………………
ii. மாரவிலையில் இருந்து சிலாபத்திற்கு உள்ள தூரம் யாது? ……………………
iii. கொழும்பிலிருந்து மாரவிலைக்கு உள்ள தூரம் யாது? ……………………
iv. சிலாபத்தில் இருந்து புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது? ……………………
v. புத்தளத்திலிருந்து மாரவிலைக்கு உள்ள தூரம் யாது? ……………………

22. பழக்கடை ஒன்றில் இருந்த பழங்களின் எண்ணிக்கை பின்வரும் உருக்களின் மூலம் காட்டப்பட்டுள்ளன.




i. மாம்பழங்களினதும் தோடம்பழங்களினதும் எண்ணிக்கை யாது? ……………………
ii. அன்னாசிப் பழங்களினதும் தோடம்பழங்களினதும் எண்ணிக்கை யாது? …………
iii. அப்பிள் பழங்களினதும் மாம்பழங்களினதும் எண்ணிக்கை யாது? ……………
iv. கூட்டுத்தொகை 187 ஐப் பெற கூட்ட வேண்டிய இரு பழங்களும் யாவை?
……………………………………………………
v. கடையில் இருந்த மொத்தப் பழங்களின் எண்ணிக்கை யாது? ……………………

23. பாடசாலையொன்றில் இடைவேளை வரை 2 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் பாடங்கள் நடைபெற்றன. மு.ப. 10.00 ற்கு இடைவேளை வழங்கப்பட்டதெனின் பாடசாலை ஆரம்பித்த நேரம் எது?
……………………………………………………


24. கடை ஒன்றில் 671 வாழைப்பழங்கள் இருந்தன. அவற்றில் முதலாம் நாள் 263 வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. இரண்டாம் நாள் 147 வாழைப்பழங்கள் விற்பனை செய்யப்பட்டன எனின் மீதியாக உள்ள வாழைப்பழங்கள் எத்தனை?
……………………………………………………

25. வீட்டிலிருந்து பாடசாலைக்கு உள்ள தூரம் 5 கிலோ மீற்றர் 750 மீற்றர் ஆகும். பிள்ளை ஒன்று 350 மீற்றர் நடந்து சென்று எஞ்சிய தூரத்தை பேருந்தில் சென்று பாடசாலை அடைகிறார். எனின் பேருந்தில் சென்ற தூரம் யாது?
……………………………………………………

26. ஒரு அறையின் நீளம் 20m 38cm உம் அதன் அகலம் 10m 72cm உம் ஆகும். அவ்விரண்டு அளவுகளுக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது?
……………………………………………………

27. 232 சவர்க்கார கட்டிகளை சமமாக இரண்டு பெட்டிகளில் அடுக்கினால் ஒரு பெட்டியில் உள்ள சவர்க்கார கட்டிகள் எத்தனை?
……………………………………………………

28. 5.079 ஐ சொற்களில் எழுதுக. ……………………………

29. 

இவ்வுருவின் செங்கோணத்தை விட குறைந்த கோணங்கள் எத்தனை உள்ளன?
……………………………………………………

**IV. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. தானிய வகைகளில் அடங்காத உணவு வகை யாது?
i. பருப்பு ii. குரக்கன் iii. கத்தரி

31. தேசிய ஒற்றுமையைக் குறிப்பதற்கு தேசிய கொடியில் காணப்படும் நிறம்
i. சிவப்பு ii. பச்சை iii. மஞ்சள்

32. இலங்கையின் மிகப்பெரிய இயற்கை வனம் அமைந்துள்ள மாவட்டம் எது?
i. இரத்தினபுரி ii. மொனராகலை iii. கேகாலை

33. பேருந்திலிருந்து இறங்கவேண்டிய, ஏறவேண்டிய சரியான பக்கங்கள் முறையே,
i. முன்னால் - பின்னால் ii. பின்னால் - முன்னல் iii. பின்னால் மட்டும்

34. ஆடையொன்றில் சமைத்த உணவின் மஞ்சள் நிறக் கறைபட்ட இடத்தை சவர்க்காரமிட்டு கழுவும் போது அவ்விடத்தில் காணக்கூடிய நிறமாற்றம்
i. செம்மஞ்சள் நிறமாதல் ii. ஊதா நிறமாதல் iii. சிவப்பு நிறமாதல்

35. நல்ல நிலையில் உள்ள முட்டை ஒன்றை உப்புக் கரைசலில் இடும்போது அவதானிக்கக் கூடியது எது?
i. முட்டை நீரில் மிதக்கும் ii. முட்டை நீரில் அமிழும்
iii. முட்டை வெடித்துவிடும்

36. கூடியளவு பயணிகளையும் பொருட்களையும் கொண்டு செல்வதற்கு பொருத்தமான பொதுவாகனம்
i. பேருந்து ii. புகையிரதம் iii. விமானம்

(11ஆம் பக்கம் பார்க்க)

(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

37. வீட்டுத் தோட்டச் செய்கையின் போது வேலிக் கம்புக்குப் பொருத்தமானது
i. கிளிசறிடியா ii. இலவம் iii. பலா

38. பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வீட்டுத் தோட்டத்தில் நடப்படும் தாவரம் எது?
i. அலரி ii. ஆமணக்கு iii. செவ்வந்தி

39. கட்டித் தொங்கவிடப்பட்டு திசையை அறிந்து கொள்ள உதவும் காந்தவகை எது?
i. வட்டக் காந்தம் ii. சட்டக்காந்தம் iii. குண்டுமுனைக் காந்தம்

40. பனிக்கட்டியொன்றை நீர் உள்ள பாத்திரமொன்றில் இட்டதன் பின்னர் அவதானிக்க முடியாதது,
i. பனிக்கட்டி நீரில் மிதக்கும் ii. பனிக்கட்டி வெப்பமடையும்
iii. நீர் குளிர்ச்சியடையும்

41. தேசப்படத்தில் புகையிரத வீதிகளைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படும் நிறம் எது?
i. கறுப்பு ii. மஞ்சள் iii. சிவப்பு

42. "வளைந்து வளைந்து புதுமையாய் வட்டவலை" எனும் பாடலடிக்குப் பொருத்தமான பிராணி
i. சிலந்தி ii. கும்புடுபூச்சி iii. பொட்டுப்பூச்சி

43. தாவர இலைகளை சேதமாக்கும் பிராணி அல்லாதது?
i. வெட்டுக்கிளி ii. மயிர்க்கொட்டி iii. புள்ளப்பூச்சி

44. தொற்றுநோய்கள் என்பதை வெளிப்படுத்தும் நிறம்
i. மஞ்சள் ii. பச்சை iii. சிவப்பு

45. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம்
i. கல்சியக் குறைபாடு ii. அயடீன் குறைபாடு
iii. இரும்புச் சத்து குறைபாடு

46. பின்வருவனவற்றுள் விற்றமின் C அடங்கியுள்ள உணவு
i. குரக்கன் ii. கீரை iii. தக்காளி

47. சேற்றில் வளர்வதும், விவசாயிகளின் தொடர்பு கொண்டதும் நாருரு வேர்த்தொகுதி கொண்ட தாவரம் எது?
i. நெல் ii. புல் iii. கற்றாளை

48. கடதாசிக் கழிவுகளை பயன்படுத்தி ஆக்கப்படும் சித்திர வகை எது?
i. அல்பனா ii. கொலாஜ் iii. ஓரிகாமி

49. வனைச்சில்லை பயன்படுத்தும் தொழிலாளி
i. குயவன் ii. உழவன் iii. தச்சன்

50. தோட்டத்தில் செவ்வந்தியை நாட்டுவதன் நோக்கம்
i. பூச்சிகளை விரட்டியடித்தல் ii. அழகாக இருத்தல்
iii. வாசனை வீசுதல்

51. ஞாபக சக்தியை அதிகரிக்க நாளாந்தம் உணவில் சேர்க்க வேண்டியது
i. பசளி ii. பாகற்காய் iii. வல்லாரை

52. வித்தினை அகற்றிய பின் சமைக்க வேண்டிய உணவுக் கூட்டம்
i. பாகல், பூசனி ii. வெண்டி, மா iii. கத்தரி, பாகல்

53. இலைக்கஞ்சி தயாரிக்க பயன்படும் இலை
i. வேம்பு ii. சாத்தாவாரி iii. கோவா

54. அதிகளவு மண்சரிவு, வெள்ளப்பெருக்கு என்பன ஏற்படக் கூடிய ஒரு மாவட்டம் எது?
i. அம்பாறை ii. இரத்தினபுரி iii. கொழும்பு

55. வீட்டில் ஏற்படக் கூடிய விபத்து அல்லாதது
i. கத்தியால் கை வெட்டுப்படல் ii. மின்சாரம் தாக்குதல்
iii. நீரில் வேகமாக அடித்துச் செல்லுதல்

56. ஒருவரிடத்தில் இருந்து இன்னொருவருக்கு தொற்றாத நோய்
i. கோவிட் 19 ii. புற்றுநோய் iii. தடிமன்

57. தனது வாழிடத்தை மண்ணால் அமைத்துக் கொள்ளும் பிராணி
i. குருவி ii. கறையான் iii. பாம்பு

58. நீரின் பயன் அல்லாதது
i. சுற்றாடலை குளிர்மையடையச் செய்தல்
ii. வெள்ளப்பெருக்கு
iii. மரஞ்செடி கொடிகள் செழித்து வளர்தல்

59. இயற்கையாகவே நீர் கிடைக்கும் முறை
i. குழாய்கள் மூலம் ii. ஆறுகள் மூலம் iii. மழை மூலம்

60. கண்ட கண்ட இடங்களில் குப்பைகளைக் கொட்டுவதால் நுளம்புகள் பெருகுகின்றன. உயிர்களைக் காவு கொள்ளும் டெங்கு நோயினை நுளம்புகள் பரப்புகின்றன. எனவே டெங்கு ஒழிப்பு என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் சொல் பிழையின்றி எழுத வேண்டும்)

....................................................................................................

....................................................................................................

....................................................................................................

## கடந்த வார (17.05.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 1 | 11. 3 | 21. 1 | 31. விடை 15 |
| 02. 1 | 12. 3 | 22. 3 | 32. 1 |
| 03. 2 | 13. 2 | 23. 3 | 33. 2 |
| 04. 3 | 14. 2 | 24. 3 | 34. 3 |
| 05. 1 | 15. 1 | 25. 1 | 35. 1 |
| 06. 3 | 16. 3 | 26. 3 | 36. 2 |
| 07. 1 | 17. 2 | 27. 3 | 37. 3 |
| 08. 1 | 18. 1 | 28. 3 | 38. 1 |
| 09. 3 | 19. 1 | 29. 1 | 39. 2 |
| 10. 1 | 20. 3 | 30. 2 | 40. 2 |

# தலைநிமிர் கழக யாழ் இந்துவின் மாற்றுக் குறையாத மன்னவன்

சோமசுந்தரம் சுரேஷ் முதலாவது ஆண்டு (24/5/2023) நினைவாக ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய 'தேசிய சுயநிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்' என்ற நூல் ஜீவநதி பதிப்பகத்தால் வெளியாகியுள்ளது.

"மாபெரும் சபை தனில்
நீ நடந்தால் உனக்கு
மாலைகள் விழ வேண்டும் ஒரு
மாற்றுக் குறையாத மன்னவன்
இவனென்று
போற்றிப் புகழ வேண்டும்"

திரைப்படப் பாடல் ஒன்றின் வரிகள் இவை. 2023 ஆம் ஆண்டு மேமாதம் பிற்பகுதி, ஒரு பெரிய சபையில், சுரேஷ் நடப்பதற்குப் பதில் நீண்ட துயிலில் கிடக்கிறான். மாலைகள் வந்து விழுகின்றன. அங்கிருப்போர் அவனைப் போற்றிப் புகழ்கிறார்கள். சொற்பூக்கள் சொரிகிறார்கள். மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று மனம் உருகுகிறார்கள்.

சிறுவயதிலிருந்து சுரேஷ் கால் வைத்த சபைகள்தான் வித்தியாசமே தவிர அவனுக்குக் கிடைத்த வரவேற்பு எப்போதும் ஒன்றே. ஏனென்றால், பாடசாலை விளையாட்டு மைதானம், அவன், மேற்கொண்ட படிப்பு, தேடிய வேலை, கற்றுக் கொண்ட ஏனைய கலைகள் போன்றவற்றை சபை என்று கருதினால், அங்கெல்லாம் முடி சூடா மன்னன் அவன். முக்கியமாக எதிரி இல்லா மன்னாதி மன்னன்.




சுரேஷ் பலவகையான விளையாட்டுகளுக்காக பல தடவை, பல மைதானங்களில், பல மட்டங்களில் நுழைந்திருக்கிறான். எப்போதும் வெற்றி வாகை சூடியே திரும்பி வந்திருக்கிறான். இங்கே என்ன சிறப்பு என்றால், சுரேஷுடன் விளையாடியவர்கள் எதிரணியைச் சேர்ந்தவர்கள். பார்வையாளர்கள் என்று எவருக்கும் சுரேஷ் மேல் எரிச்சல், பொறாமை,கோபம், பகை எதுவுமே வந்ததில்லை.

அதற்கு மாறாக, அவர்கள் மனதில் இருந்ததெல்லாம் 'எப்படி சுரேஷ் போல தாமும் விளையாடலாம்' என்ற கேள்வியே. தன்னைச் சூழ்ந்தவர்களை எல்லாம் தன் ரசிகர்களாக மாற்றியது அவனுடைய சிறப்பியல்பு. அவனே அறியாமல் நடந்த ஆளுமைத் தொடுகையது.

பாடசாலை நாட்களில் வகுப்பறையை விட விளையாட்டு மைதானத்தில் அதிக நேரம் செலவிட்டவன். ஏன், நேரத்தை முதலிட்டவன் என்றும் சொல்லலாம். ஏனென்றால், அதற்கான பலனை தனக்காகவும், தனது அணி, பாடசாலை அல்லது கழகத்துக்காகவும் நேர்த்தியாகக் கொண்டு வந்தவன். திறமைகளை கூர்மைப்படுத்தி செய்ததால் எல்லாவற்றிலும் பலன் கிடைத்தது.




பின்னர், ஒரு கட்டத்தில், எல்லா விளையாட்டுகளையும் தற்காலிகமாக நிறுத்தி கொழும்பில் மேற்படிப்பு படித்தான். அங்கும் பலர் அனுபவித்த இன்பங்களை உதறி தனக்கு எது மிக முக்கியம் என்பதில் தன் கவனத்தை நேர்நோக்கி செய்து தன் திறமையை நிரூபித்து பெருமைப்படக் கூடிய தொழில் பெற்று அமெரிக்கா சென்றான்.

புகைப்படம் எடுத்தல், ஓவியம் வரைதல், சமையல், சைக்கிள் ஓட்டுதல், மலையேற்றம் (*Photography, Drawing and Painting, Cooking, Cycling, Trekking*) என்று தன் மனதையும் உடலையும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருந்தவன். குடும்பத்துக்காகவும் தரமான நேரம் ஒதுக்கி வாழ்க்கையை சமநிலையாகக் கொண்டு போனவன்.

எப்போதும் ஒரே மாதிரியான சிரிப்பு, பல்வேறுபட்ட திறமைகளும் பொழுது போக்குகளும், எடுத்த வேலையில் கவனக் குவிப்பு, எவருடனும் பகைமை பாராட்டாமை என சுரேஷ் பழகிய அனைவரும் ஒரே கருத்தைக் கொண்டிருந்தமை தான் வியப்பும் சிறப்பும்.

ஒவ்வொரு வயது காலப் பகுதிகளிலும் அந்த நேரத்துக்கு மிகமுக்கியமான விஷயங்களில் தன் திறமையையும், கவனத்தையும் செலுத்தி தன் கடமையைச் சரிவரச் செய்தவன்.

2014 ஆம் ஆண்டிலிருந்து தன் பாடசாலை நண்பர்களை சந்திப்பதற்கான வாய்ப்புகளையும் தவறவிடாதவன். அந்தச் சந்திப்புகளில் அவனது பண்பையும் முதிர்ச்சியையும் நாங்கள் சிலாகித்துக் கொண்டு வரும் போது ஓரிரவு, பிள்ளைகளுக்குக் கதைசொல்லி உறங்க வைத்துவிட்டு தானும் உறங்க என்று போனவன் மேலுலகத்திலுள்ள சபைக்கு வீறு நடை போட்டு போய் விட்டான். அவனது வாழ்க்கையை எங்களுக்குக் கதையாக விட்டுச் சென்றுவிட்டான்.

**சிவப்பிரகாஷ் வயித்தீஸ்வரன்**

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு றோட்டரி கழகத்தினர் மருத்துவ உபகரணம் அன்பளிப்பு




மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் காது, மூக்கு, தொண்டை விசேட பிரிவுக்கு பிறந்த குழந்தைகளின் கேள்விப் புலனை உடன் பரிசோதனை செய்யும் மருத்துவ உபகரணமொன்றை மன்னார் றோட்டரி கழகத்தின் ஒருங்கிணைப்பின் மூலம் கண்டி றோட்டரி கழகத்தினர் நேற்று அன்பளிப்புச் செய்தனர்.

இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.எம். அஸாத், றோட்டரி கழகத்தின் தலைவர் காது மூக்கு தொண்டை விசேட வைத்திய நிபுணர் ஜேசுராஜ் பெரேரா, டொக்டர் பிரியதர்சன், டொக்டர் ரோய், டொக்டர் ஜோகராசா மற்றும் ஏனைய றோட்டரி கழக உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# பதுளை மாவட்டத்தில் சீரற்ற காலநிலை; பொது போக்குவரத்துக்கு இடையூறு

**(ஊவா சுழற்சி நிருபர்)**

பதுளை மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக கடந்த இரண்டு தினங்களாக காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இதனால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தும், ஆங்காங்கே மண்சரிவு அனர்த்தங்களும் ஏற்பட்டு வருகிறது. மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது. தியத்தலாவை ஹப்புத்தளை ரயில் வீதியில் காற்றின் வேகத்தால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் நேற்று (23) கொழும்பு பதுளை ரயில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது. இருந்த போதிலும் ரயில் ஊழியர்களின் அயராத உழைப்பினால் பல மரங்கள் வெட்டி அகற்றப்பட்டு கொழும்பு பதுளை ரயில் போக்குவரத்து சீர்செய்யப்பட்டு வருவதாக புகையிரத கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது . அடிக்கடி பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை ,தியத்தலாவை ,வெலிமடை மஹியங்கணை, ஹல்துமுல்ல, போன்ற பிரதேசங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்வதால் ஆங்காங்கே மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் பொது போக்குவரத்து தம்பிதமடைந்துள்ளதாக பதுளை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம்



தெரிவித்துள்ளது. இது இவ்வாறிருக்க ஊவாவிலுள்ள நீர்வீழ்ச்சிகள் யாவும் நிறைந்து வழிந்து செல்வதால் உள்நாடு மற்றும் வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளை இவற்றில் இறங்கி நீராட வேண்டாம் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். வெல்லவாய எல்லா வீதியில் நேற்று பெய்த அடைமழை காரணமாக இராவணல்ல பெருக்கெடுத்து வீதியில் வழிந்து ஓடியதில் அவ்வீதி சேறும் சகதியுமாக காணப்படுவதாக தெரிவிக்கின்றனர். எனவே அவ்வீதியில் பயணிப்போர் மிக கவனமாக பயணிக்குமாறு எல்ல போக்குவரத்துப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கண்டியில் மாணவர்களுக்கான உந்துதல் பயிற்சிப் பட்டறை

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**

கண்டி தமிழ் வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் (தமிழ்ப்பிரிவு) ஏற்பாட்டில் அயல் பாடசாலை அதிபர்களின் ஆதரவில் நடாத்தப்படுகின்ற இம்முறை க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான உந்துதல் பயிற்சிப் பட்டறை கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் நாளை (25.5.24 ) காலை 8.30 மணிமுதல் 12.30மணிவரை நடைபெறவுள்ளது.

இந்த பயிற்சிப் பட்டறையில் கண்டி நாவலப்பிட்டி, கம்பளை, புசல்லாவ, பன்வில, தெல்தெனிய ஆகிய பாடசாலைகளிலிருந்து சுமார் 1500 கலந்து கொள்ளவுள்ளனர்.

# சார்ணியா வித்தியாலய கௌரவிப்பு

பதுளை சார்ணியா தமிழ் தேசிய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வாழும்போதே வாழ்த்துவோம் என்ற மாபெரும் கௌரவிப்பு விழாவும் சிறுகதை நூல் வெளியீட்டு விழாவும் நாளை 2024.05.25ஆம் திகதி காலை 9 மணிக்கு கந்தேகெதர இந்து கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது. பதுளை கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் ஏ. தேவராஜனின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், சமுர்த்தி அஸ்வெஸ்சும திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ். சத்தியசீலன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். பதுளை கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி ஜோதிலட்சுமி பத்மநாதன் நூல் நயவுரை ஆற்றவுள்ளார். அன்றைய தினம் காலை 8 மணிக்கு கந்தேகெதர நகரத்தில் கௌரவிப்பு விழாவின் ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது. 1980ஆம் ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரையுள்ள 30 ஆண்டு காலம் இப்பிரதேசத்தில் கல்விப் பணி செய்து சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றிய அதிபர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி கௌரவிக்கும் விழாவும் தமிழ் ஆசானான வெல்லாவெளி விவேகானந்தன் எழுதிய "உமிச்சட்டி" என்ற சிறுகதையின் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

# எல்.பி.எல். தொடர் திட்டமிட்டபடி: தம்புள்ளவுக்கு புது உரிமையாளர்




தம்புள்ள அணி உரிமையாளர் கைது செய்யப்பட்டு அந்த அணியின் உரிமையாளர் நீக்கப்பட்ட நிலையில், லங்கா பிரீமியர் லீக் தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ள அணியின் இணை உரிமையாளர் கைது செய்யப்பட்ட நிகழ்வு எப்படி இருந்தபோது, எல்.பி.எல். தொடரின் 05 ஆவது பருவம் திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று போட்டி நிகழ்ச்சியின் உரிமை பங்குதாரரான இன்னோவேட்டிவ் புரொடக்ஷன் குழுமம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'நியாயமான விளையாட்டு மற்றும் விளையாட்டுத்திறன் ஆகியவற்றின் உணர்வை வெளிப்படுத்தும் வகையில், கிரிக்கெட்டில் சிறந்த போட்டிகளின் காட்சிப்பொருளாக இந்தப் போட்டி தொடர்ந்து இருப்பதை உறுதிசெய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பது எல்.பி.எல். 5ஆவது பருவம் ஐந்து அணிகளைக் கொண்டதாக அதன் முழு அட்டவணையுடன் நடத்தப்படும் என்று உறுதி செய்த குழுமம், உரிமையாளர் நீக்கப்பட்ட தம்புள்ள அணி புதிய உரிமையாளரின் கீழ் போட்டியில் இடம்பெறும் என்று குறிப்பிட்டது. 'தொடரில் அணியின் தடையற்ற மாற்றம் மற்றும் தடங்கல் இல்லாத பங்கேற்பை உறுதி செய்யும் வகையில் புதிய உரிமையாளரை உறுதி செய்யும் இறுதிக் கட்டத்தை நாம் எட்டியுள்ளோம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த லங்கா பிரீமியர் லீக் தொடர் எதிர்வரும் ஜூலை 01 தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதோடு கண்டியில் ஆரம்பமாகும் தொடர் பின்னர் தம்புள்ளை மற்றும் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

தம்புள்ள தண்டர்ஸ் அணியின் உரிமையாளர் உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்படுவதாக லங்கா பிரீமியர் லீக் கடந்த புதனன்று (22) அறிவித்தது. தம்புள்ள தண்டர்ஸ் உரிமையாளரான பிரிட்டன் கடவுச்சீட்டை உடைய பங்களாதேஷ் நாட்டவரான இம்பீரியல் ஸ்போட்ஸ் குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தமீம் ரஹ்மான், ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தமீம் ரஹ்மானை எதிர்வரும் மே 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

## அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணி வெற்றி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை கல்விக் கோட்டமட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணி வெற்றி பெற்று சம்பியனாகி அக்கரைப்பற்று கல்வி வலயமட்டப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (22) கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். றஸ்மி தலைமையில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் பாலமுனை அல்–ஹிக்மா வித்தியாலய 18 வயதுக்கு உட்பட்ட அணியை அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணியினர் 2–0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று மேசைப்பந்து அணி மாவட்ட சம்பியனானது

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



விளையாட்டுத்துறை அமைச்சின் ஆதரவில் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற மேசைப்பந்து சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பிரதேச செயலக மேசைப்பந்து அணி மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

இச்சுற்றுத்தொடர் கடந்த திங்கட்கிழமை (20) சம்மாந்துறை விளையாட்டு கட்டிடத்தொகுதியின் உள்ளக அரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# காசாவின் சனநெரிசல் மிக்க பகுதிகளுக்கு இஸ்ரேலிய படை, டாங்கிகள் முன்னேற்றம்

### பேச்சுவார்த்தைக்கு தயாரென நெதன்யாகு அலுவலகம் அறிவிப்பு

காசாவின் ரபா மற்றும் ஜபலியா நகரங்களில் படை நடவடிக்கையை தீவிரப்படுத்தி இருக்கும் இஸ்ரேலிய இராணுவம் அங்கு மக்கள் செறிந்து வழும் பகுதிகளை நோக்கி முன்னேறி வருவது பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும் அச்சத்தை அதிகரித்துள்ளது.

எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு நகரான ரபாவில் கடந்த இரண்டு வாரங்களாக படையெடுப்பை முன்னெடுத்து வரும் இஸ்ரேலிய படைகளுடன் பலஸ்தீன போராளிகள் கடுமையாக சண்டையிட்டு வருவதோடு அங்கு வீதிகளிலும் மோதல்கள் இடம்பெறுவதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவில் இஸ்ரேலிய தரைப் படை இன்னும் நுழையாத பகுதியாக இருக்கும் ரபா, காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்ற பகுதியாகவும் உள்ளது. எனினும் இஸ்ரேலியப் படையின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து அங்கிருந்து இதுவரை 800,000க்கும் அதிகமான மக்கள் மீண்டும் ஒருமுறை வெளியேறி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ரபாவில் இராணுவம் தனது படை நடவடிக்கையை விரிவுபடுத்தி எகிப்து எல்லையை ஒட்டி இருக்கும் பிலடெல்பி தாழ்வாரத்திற்கு முன்னேறி இருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரபாவில் முன்னெடுக்கப்படும் படை நடவடிக்கைக்கு அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. எனினும் அங்கு மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கையையே முன்னெடுப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் காசாவில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் 10 படைப்பிரிவுகளில் ஐந்து பிரிவுகள் தற்போது ரபாவில் செயற்பட்டு வருவதாகவும் இஸ்ரேலிய தரைப்படைகள் ரபாவின் மத்திய பகுதியை நோக்கி முன்னேறி வருவதாகவும் போர் கண்காணிப்பாளர்கள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய போர் கள நிலை குறித்து அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட போர் கற்கைகளுக்கான நிறுவனம் மற்றும் சி.டீ.பீ. நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ரபாவில் இயங்கும் இஸ்ரேலியப் படைகள் எகிப்துக்கும் காசாவுக்கும் இடையே 14 கிலோ மீற்றர் (8.5மைல்) நிலப்பகுதியான பிலடெல்பி தாழ்வாரத்தில் முன்னேறி வருகின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் தரைவழி நடவடிக்கைக்கு நிலப் பகுதியை வடிவமைக்கும் வகையில் கிழக்கு ரபாவில் இலக்குகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அந்த போர் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

மறுபுறம் காசா போர் வெடித்த ஆரம்பத்தில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்த வடக்கு காசாவில், குறிப்பாக ஜபலியாவில் இஸ்ரேலிய துருப்புகள் மீண்டும் ஒருமுறை முன்னேறி வருகின்றன. குடியிருப்பு பகுதிகளில் அங்கு மோதல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன.



ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிச் சூட்டில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டதாக குத்ஸ் நெயூஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. அவர் தலையில் சுடப்பட்டுள்ளார்.

ஜபலியாவில் அண்மைய நாட்களாக முற்றுகையை கடைப்பிடித்து வரும் இஸ்ரேலிய இராணுவம் கடந்த புதன்கிழமை அந்த நகரில் பலூஜா பகுதியில் நடத்திய ஏவுகணை தாக்குதலில் அறுவர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் கடந்த எட்டு மாதங்களாக தொடரும் இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35,700ஐ தாண்டியுள்ளதோடு காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 80 ஆயிரத்தை தாண்டி இருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஸ்தம்பித்திருக்கும் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க தயாராக இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

மூன்று ஐரோப்பிய நாடுகள் பலஸ்தீன நாட்டை அங்கீகரித்து காசா போர் இஸ்ரேல் அரசு மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அழுத்தத்தை அதிகரித்துள்ளது. குறிப்பாக ஹமாஸ் தலைவர்களுடன் நெதன்யாகு மற்றும் அவரது பாதுகாப்பு அமைச்சருக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

மறுபுறம் காசாவில் சிக்கி இருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான உடன்பாடு ஒன்றுக்கு செல்வதற்கு இஸ்ரேல் அரசுக்கு அழுத்தம் கொடுத்து இஸ்ரேலியர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இஸ்ரேலிய பேச்சுவார்த்தைக் குழுவை போர்க்கால அமைச்சரவை கேட்டுக் கொண்டதாக நெதன்யாகு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மாத ஆரம்பத்தில் ரபா மீது இஸ்ரேல் படை நடவடிக்கையை ஆரம்பித்ததை அடுத்து, எகிப்து, கட்டார் மற்றும் அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்ற முந்தைய சுற்று பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்தன.

எனினும் புதிய சுற்று பேச்சுவார்த்தையை எந்தத் திசையில் முன்னெடுப்பது அல்லது பேச்சுவார்த்தை குழுவினர் பேச்சுவார்த்தையை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது தொடர்பில் எந்த விபரத்தையும் அந்த அலுவலகம் குறிப்பிடவில்லை. காசா போரை ஒட்டி ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலில் அங்குள்ள ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் நடத்திய சுற்றுவளைப்பு நேற்று (23) முடிவுக்கு வந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த முற்றுகை நடவடிக்கையில் குறைந்தது நான்கு சிறுவர்கள், மருத்துவர் ஒருவர் மற்றும் ஆசியர் ஒருவர் உட்பட 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். அந்த நகரில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியபோதும், இஸ்ரேலிய துருப்புகள் வீதிகளில் கண்மூடித்தனமாக சூடு நடத்தியதாக பார்த்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் கல்கில்யா நருக்கு அருகில் ஜயூஸ் சிறு நகரில் வைத்து இரு சிறுவர்கள் மீது சூடு நடத்தப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. இந்த சிறுவர்கள் மேற்குக் கரையை பிரிக்கும் சுவரை அணுகியபோதே அவர்கள் இஸ்ரேலிய படையினரால் சுடப்பட்டுள்ளனர். இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பலஸ்தீன செம்பிறை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய படை மற்றும் இஸ்ரேலிய குடியேறிகளின் தாக்குதல்களில் குறைந்தது 518 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு சுமார் 5,000 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

## ரபா தாக்குதல்: சர்வதேச நீதிமன்ற தீர்ப்பு இன்று



ரபாவில் இஸ்ரேல் நடத்தும் தாக்குதலை நிறுத்தக் கோரி சர்வதேச நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்த வழக்கின் தீர்ப்பு இன்று (24) வழங்கப்படவுள்ளது.

பலஸ்தீன மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் காசாவில் குறிப்பாக ரபாவில் இஸ்ரேலின் தாக்குதல்களை நிறுத்துவதற்கு உத்தரவிடும்படியே தென்னாபிரிக்கா நீதிமன்றத்தை கேட்டது. இது தொடர்பிலான விசாரணை கடந்த வாரம் இடம்பெற்றது.

இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தொடுத்த இனப்படுகொலை வழக்கின் ஓர் அங்கமாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கடந்த ஜனவரியில் இடம்பெற்ற ஆரம்பக்கட்ட விசாரணைக்குப் பின்னர் காசாவில் மனிதாபிமான நெருக்கடியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு இஸ்ரேலுக்கு உத்தரவிட்டது உட்பட பல இடைக்கால நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

## தேர்தல் பிரசார மேடை சரிந்ததில் 9 பேர் பலி



மெக்சிகோவில் பிரசார மேடை சரிந்து விழுந்ததில் ஒரு குழந்தை உட்பட குறைந்தது 9 பேர் உயிரிழந்திருப்பதோடு சுமார் 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் ஜோர்ஜ் அல்வாரெஸ் மேனெஸின் பிரசாரத்தின்போது அந்தச் சம்பவம் நடந்தது. மேடையோடு அங்கு பொருத்தப்பட்டிருந்த பெரிய திரையும் விழுந்தது.

அப்போது மேனெஸும் அவரின் கட்சி உறுப்பினர்களும் மேடையில் இருந்தனர். 38 வயது மேனெஸ் தாம் பாதுகாப்பாக இருப்பதாகத் தெரிவித்தார்.

பலத்த காற்று வீசியதால் மேடை விழுந்ததாக மெக்சிகோ ஜனாதிபதி ஆண்ட்ரெஸ் மேனுவல் லோப்பெஸ் ஓப்ரடார் கூறினார். பாதிக்கப்பட்டோருக்கு அவர் தமது அனுதாபங்களைத் தெரிவித்தார்.

மெக்சிகோவில் அடுத்த மாதம் (ஜுன்) 2ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் மேனெஸ் வெற்றிபெறும் வாய்ப்புக் குறைவே என்று கூறப்படுகிறது.

## ஜூலையில் பிரிட்டனில் திடீர் பொதுத் தேர்தல்



பிரிட்டனில் எதிர்வரும் ஜுலை 14 ஆம் திகதி திடீர் பொதுத் தேர்தலை நடத்தும் அறிவிப்பை அந்நாட்டு பிரதமர் ரிஷி சுனக் வெளியிட்டுள்ளார்.

தனது டோனிங் வீதி அலுவலகத்திற்கு முன்னாள் நேற்று முன்தினம் பேசிய 44 வயதான சுனக், 'பிரிட்டன் நாட்டவர்கள் தமது எதிர்காலத்தை தேர்வு செய்வதற்கு தற்போது நேரம் வந்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கன்சர்வேட்டிவ் கட்சி தலைவராக நியமிக்கப்பட்டார். அதன் பின் பிரதமராக பொறுப்பேற்ற அவர், எதிர்கொள்ளும் முதல் தேர்தலாக இது அமையவுள்ளது.

மறுபுறம் எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி தேர்தலுக்கு எப்போதும் தயாராக இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களே தேர்தல் பிரசாரத்தில் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தாய்வானை சூழவும் சீனா இரு நாள் போர் ஒத்திகை



சுயாட்சி புரிந்து வரும் தாய்வானை சூழவுள்ள வான் மற்றும் நீர் பகுதிகளில் சீனா இரண்டு நாள் போர் ஒத்திகை ஒன்றை நேற்று ஆரம்பித்துள்ளது.

தாய்வான் நீரிணை, தாய்வானின் வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு பகுதிகள் அதேபோன்று கின்மன், மட்சு, வுகியு மற்றும் டொங்கியின் தீவுகளை சூழ இந்தப் போர் ஒத்திகை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக சீன அரச செய்தி நிறுவனமான சின்ஹுவா குறிப்பிட்டுள்ளது.

பிரிவினைவாத செயல்களுக்கு இந்தப் போர் ஒத்திகை வலுவான தண்டனையாக இருக்கும் என்று சீன இராணுவ செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தாய்வானின் இறையாண்மையைப் பாதுகாக்க கடற்படை, வான் மற்றும் தரைப்படைகள் அனுப்பப்பட்டுள்ளன என்று தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்வான் ஜனாதிபதியாக அண்மையில் பதவியேற்ற வில்லியம் லாய் தனது முதல் உரையில், தாய்வான் இறைமை மற்றும் சுதந்திர நாடு என்றும் அதன் ஜனநாயகம் மற்றும் இறைமையில் எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யாது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 24ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.